# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்


தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

மலர் : 11
இதழ் : 8
ஜூன் – 2015




"அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்." 2 தீமோத்தேயு 1 : 5


ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

# ஷாலோம் CBC (VBS) இயக்குநர்கள் &ஆசிரியர்கள் பயிற்சி - 2015



பாடல் மற்றும் ஆராதனை வேளை



அபிநயப் பாடல் வேளை



பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் ஒரு பகுதி



தேவ செய்தி : பேராயர் வே. தேவதாஸ் அவர்கள்




சிறப்புப் பயிற்சி : சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்



ஆலோசனை நேரம் : சகோ. கிளாட்சன் டைட்டஸ் அவர்கள்



குறு நாடகத்தின் மூலம் பயிற்சி



பொம்மலாட்டத்தின் மூலம் பயிற்சி



CBC புத்தகங்களுக்கான சிறப்பு ஜெபம்

## உங்கள் சகோதரனிடமிருந்து



**கிறிஸ்துவுக்குள் மிக அன்பான ஷாலோம் பங்காளர்களே,**

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள்!** இந்த வருடத்தில் கடந்த 5 மாதங்கள் கர்த்தர் நம்மை நடத்தி வந்த கிருபைக்காக தேவனை துதிக்கிறேன். குறிப்பாக பீல் மக்கள் மத்தியில் ஊழிய வளர்ச்சிக்காக விசேஷமாக மே மாதம் ஷாலோம் சபைகளின் CBC (சிறுவர் வேதாகமப் பள்ளி) மூலமாக 40,000க்கும் அதிகமான ஆதிவாசி பிள்ளைகள் **"நிலைத்திருங்கள்"** என்ற வசனத்தின்படி கிறிஸ்துவின் சபையில் நிலைத்திருக்க தேவன் கிருபை தந்தார். ஜெபித்து தாங்கிய உங்கள் யாவருக்கும் எங்கள் வாழ்த்துக்களையும் நன்றியையும் கூறுகிறோம்.

ஜீன் மாதம் நம் அனைவருக்கும் மிக முக்கியமான மாதமாகும். பிள்ளைகளுக்காக அதிக கரிசனையுடன் பள்ளிக்கூடம், கல்லூரி, உயர்படிப்பிற்கான காரியங்களை செய்ய வேண்டிய மாதமாகும். **"உன் சந்ததி மேல் என் ஆசீர்வாதத்தை ஊற்றுவேன்"** (ஏசாயா 43:2) வாக்குத்தத்தின்படி தேவன் தாமே நம் பிள்ளைகளுக்கு மிக்க நலமானதையே கட்டளையிடுவார். நல்ல வேலை வாய்ப்புகளை தந்து எதிர்கால வாழ்வையும் அமைத்து சந்ததியை பெருகப் பண்ணுவார். உங்களுக்காக கருத்தாக நாங்கள் ஜெபிக்கிறோம்.

நீங்களும் குறிப்பாக நம் ஷாலோம் தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலக ஊழியர்களின் பிள்ளைகளின் படிப்பிற்கு தேவையான நிதி உதவியும்; விசேஷமாக நம்முடைய 580க்கும் அதிகமான சுதேச ஊழியர்களின் பிள்ளைகளில் படித்துக் கொண்டிருக்கும் சுமார் 1200 மாணவர்களின் கல்விப்பணி தேவைக்காக குறிப்பாக சுமார் 200 பிள்ளைகள் உயர்கல்வி, ஆசிரியர், செவிலியர் போன்ற கல்லூரி படிப்புக்கான நிதி உதவி கிடைக்கப்படவும், பீல் ஆதிவாசி சகோதரிகள் பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள். குறிப்பாக கல்விப்பணி உதவிக்கான நிதி சுமார் ரூ.20 இலட்சங்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள். அந்த நிதி உதவியை **Shalom Charity Mission** என்ற பெயருக்கு அனுப்ப அன்புடன் கேட்கிறேன். **அதற்காக 80G வரிவிலக்கு சலுகை உண்டு என்பதைத் தெரிவிக்கிறோம்.**

தொடர்ந்து கட்டப்பட்டு வரும் **20 கிராம ஆலயங்களுக்காக** ஜெபியுங்கள். இந்த ஆண்டு நல்ல மழையை தேவன் கட்டளையிட கருத்தாக ஜெபியுங்கள். மேலும் ஊழியத்திற்கு எதிராக எழும்பும் எதிர்ப்புகள், அதிகாரங்கள், மனித ஆலோசனைகள் விலகும்படி ஜெபியுங்கள்.

நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம். கர்த்தர் தாமே உங்களை **"நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து உன்னைப் பெருகவே பெருகப் பண்ணுவேன்"** – எபி. 6:13 – வசனத்தின்படி உங்களையும், உங்கள் சந்ததியையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)



# தலைமுறை தலைமுறையாய் நிலைத்திருக்கும் விசுவாசம்

சிறப்புச் செய்தி : பேராயர். **வே. தேவதாஸ்**

**ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். "அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்."** 2 தீமோத். 1:5

பிதாவாகிய தேவன் ஆபிரகாமை தெரிந்துக் கொண்டு அவனை ஆசீர்வதித்து அவன் சந்ததியையும் ஆசீர்வதித்து **"உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்"** என்று வாக்கு பண்ணினார். தன்னை அழைத்த தேவனை ஆபிரகாம் விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. (கலாத் 3:6) அந்த விசுவாசம் ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு என்று தலைமுறை தலைமுறையாக நிலைத்திருந்தபடியால் தேவனுடைய வாக்குத்தத்தத்தை சுதந்தரித்து விசுவாச மார்க்கத்தாராக விளங்குகிறார்கள். பிதாவாகிய தேவனும் **"நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய கர்த்தர்"** என்று யாத்திராகமம் 3:6 வசனத்தில் மோசேக்கு தன்னை வெளிப்படுத்தும் போது திருவுளம் பற்றினார்.

பிரியமானவர்களே நம்முடைய மூதாதையர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபோது அவர்களிடத்தில் காணப்பட்ட விசுவாசம் விலையேறப் பெற்றதாகும். நானும் என் மனைவியும் எங்கள் பெற்றோரின் பெற்றோர்கள் அதாவது தாத்தா, பாட்டி அவர்கள் தேவன் பேரில் வைத்த விசுவாசம் பக்தி வைராக்கியத்தை பற்றி பேசுவோம். அது எங்களை உற்சாகப்படுத்தும். பீல் ஆதிவாசி ஜனங்கள் முதன் முறையாக இயேசுவை ஏற்றுக் கொண்டு அவர்களுக்குள் ஊற்றப்பட்ட விசுவாசம் அவர்கள் இயேசுவின் மீது வைத்த அன்பை பார்க்கும் போது ஆச்சரியமாக உள்ளது. இயேசுவை நேசித்து ஆராதிப்பது, உறுதியாக ஜெபிப்பது, தேவனுக்காக கொடுப்பது, குறிப்பாக இராப்போஜனம் எடுக்கும் போது அப்பத்தையும், திராட்சரசத்தையும் பெற்றுக் கொள்ளும் போது அழுது கண்ணீருடன் இயேசுவின் அன்பை நினைத்துப் பெற்றுக் கொள்வது இயேசுவின் மேல் கொண்ட விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது.

தேவன் இந்த விசுவாசத்தை நமக்கு மட்டுமல்ல நம் சந்ததிக்கும், சந்ததியின் சந்ததிக்கும் கொடுக்கும்படியாகவும் அது நிலைத்திருக்கும்படியாகவும் விரும்புகிறார். ஆகவே தான் அவர் சந்ததியை ஆசீர்வதிக்கிற தேவனாயிருக்கிறார். **"நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்"** (எரேமி. 30:22) என்று வாக்குரைத்துள்ளார். நம் சந்ததியை நம்மீது ஊற்றப்பட்ட அபிஷேகத்தை, வாக்குத்தத்தத்தை, ஆசீர்வாதங்களை அவர்களுக்கும் தர சித்தம் உள்ளவராய் இருக்கிறார். ஏசாயா 59 : 21ஐ வாசித்துப் பாருங்கள்.

**“உன் மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும் இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்; இது எனக்கு அவர்களோடிருக்கும் என் உடன்படிக்கையென்று கர்த்தர் சொல்லுகிறார்.”**

கர்த்தர் சொல்கிறார் உன் மேல் இருக்கிற என் ஆவியும், அப்படியானால் தேவன் நமக்குத் தந்த விலையேறப்பெற்ற இரட்சிப்பு, அபிஷேகம் போன்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நம் சந்ததிக்கு தேவன் தருகிறார். உன் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள், நோவாவின் பேழையில் அவனது குடும்பத்தார் அனைவரும் அடைக்கலம் பெற்றுக் கொண்டதைப் போல நம் குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள், மருமக்கமார்கள், பேரப்பிள்ளைகள் என்று சந்ததி சந்ததியாக தேவன் ஆவிக்குரிய நன்மைகளை கட்டளையிடுவார். அதுபோல் தேவன் அருளிய அவர் வார்த்தைகளான வாக்குத்தத்தங்கள், கற்பனைகள், நியமங்கள், ஆலோசனைகள் என்றும் விலகாது என தேவன் வாக்குக் கொடுக்கிறார்.

ஆதி அப்போஸ்தல திருச்சபையில் பவுல் அடியார் ஊழியம் செய்து தன்னுடைய ஊழியத்தின் கடைசி நாட்களில் தீமோத்தேயுவை சிறந்த போதகராக, திருச்சபை தலைவராக எழுப்பி அவனுடைய மூதாதையர், பெற்றோரைப் பற்றி மிக அழகாக எழுதியுள்ளார். **“அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்.” –2 தீமோத். 1:5** தேவன் வாக்குக் கொடுக்கும் போது பெற்றோர்களாகிய நாம் அவர்களை சரியான பாதையில் நடத்த தேவன் நமக்கு பொறுப்பு தந்துள்ளார்.

**முதலாவதாக ஆதி. 18 : 19ஐ வாசித்துப் பாருங்கள்** ஆபிரகாமுக்கு தேவன் மிகத் தெளிவாக கட்டளைக் கொடுத்து தன் விசுவாசத்தில் பிள்ளைகளை வளர்க்க ஆலோசனை தந்துள்ளார். ஆபிரகாமும் அப்படியே செய்தபடியால் ஈசாக்கு தியானம் செய்கிற புருஷனாகவும், யாக்கோபு ஜெபித்து ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்கிறவனாகவும் காணப்பட்டான்.

**இரண்டாவதாக உபா. 6 : 6–9 வரை வாசித்துப் பாருங்கள்** இஸ்ரவேல் ஜனங்களை தேவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்து தம் சொந்த ஜனமாக ஏற்றுக் கொண்டார். ஆனால் பின்வரும் சந்ததி இந்தப் பாடுகள், உபத்திரவங்கள், மீட்பு இவைகளையெல்லாம் மறந்து விடுவார்கள். அவர்களுக்கு ஞாபகப்படுத்த கற்பனைகளைக் கற்றுக் கொடுத்து நீதியின் பாதையில் அவர்களை நடத்த பெற்றோர்களாகிய நமக்கு அதிகப் பொறுப்பு உண்டு.

என்னுடைய வாலிப வயதில் நான் தேவனை விட்டு வழி விலகி குடும்ப சூழ்நிலை காரணமாக நான் அநேக பாடுகள், துன்பங்களை அனுபவித்தேன். உலக வாழ்வு வேண்டாம் என தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தேன். தேவன் எனக்கு அற்புதமாக ஜீவன் தந்து இரட்சித்து அபிஷேகம் பண்ணி ஊழிய தரிசன அழைப்புத் தந்து ஒரு ஜாதி மக்களுக்கு உன்னை ஆசீர்வாதமாக வைப்பேன் என திருவுளம் பற்றினார். 1985ம் ஆண்டு திருமணமான முதல் வாரத்தில் இருவரும் சாட்சிகளைப் பகிர்ந்துக் கொண்டு ஜெபித்த போது வில் அம்பு வைத்திருக்கும் பீல் ஆதிவாசி மக்களை தரிசனத்தில் காட்டினார். சுமார் 30 வருடங்களுக்கு முன்பாக எவ்வித வசதிகள் இல்லாத ஊரில் பேய் பங்களாவில் ஒரு பழைய சைக்கிளில் ஊழியத்தை கிராமங்களில் சென்று செய்ய ஆரம்பித்தோம்.

நோய்கள் சுகமாகி அற்புத விடுதலைப் பெற்றார்கள். அசுத்த ஆவிகள் ஓடியது. குடிவெறி, கொலைவெறி, கொள்ளையடிக்கும் பாவக்கட்டுகளை உடைத்து பரிசுத்தமான வாழ்விற்கு இயேசுவின் சுவிசேஷகராய் வழிநடத்தப்பட்டார்கள். 580 சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட்டு 600க்கும் அதிகமான சபைகள், பல்லாயிர பீல் ஆதிவாசி குடும்பங்கள் விசுவாசிகளானார்கள். 300க்கும் அதிகமான ஆலயங்கள் கட்டப்பட்டது. தேவன் ஷாலோம் திருமண்டலமாக ஆசீர்வதித்து தேசத்திற்கு ஆசீர்வாதமாக வைத்துள்ளார். **தேவனுக்கே மகிமை.**

எங்கள் ஊழியப் பாதையில் 29 வருடங்களின் அனுபவம் என்னுடைய சாட்சி, என் பிள்ளைகளின் சிறு வயதிலிருந்து இரவு குடும்ப ஜெபத்திலும் அவர்களை குடும்பமாக அழைத்துச் செல்லும் பிரயாண நேரங்களிலும் பகிர்ந்துக் கொள்வது வழக்கம். இப்போது பெரிய பிள்ளைகள் ஆனபோதிலும் எங்களிடத்தில் நாங்கள் கடந்து வந்த பாதை; ஊழியப் பாதையில் தேவனுடைய பலத்தக் கரமும், ஓங்கிய புயமும் நடத்திய விதமும் தேவனால் அற்புதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்ட சாட்சிகளை கேட்கும் போது அவர்கள் கண்களில் ஆனந்த கண்ணீர் வரும். விசுவாசம் வளரும், தேவனைத் துதிப்பார்கள். இன்னும் அதிகமாக ஜெபிப்பார்கள். நாங்களும் தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்வோம் என்று 3 பிள்ளைகளும் அர்ப்பணித்துள்ளார்கள்.

தேவன் தந்த வாக்குத்தத்தங்களின்படி நம் சந்ததியை தேவன் ஆசீர்வதிக்க நாம் அவர்களுக்காக கர்ப்பத்தில் உருவாகும் நாள் முதல் பக்தி உள்ள சந்ததியாக விளங்க ஜெபிப்போம். ஆபிரகாம், அன்னாள், மனோவா குடும்பம் சகரியா–எலிசபெத், லோவிசாள் ஐனிக்கேயாள் போல தேவனுடைய ஆலோசனைகளைப் பெற்று விசுவாச சந்ததியை தேவனுக்காக உருவாக்குவோம்.

மட்டுமல்லாமல் **“உன் சந்ததிகள் பூமியிலுள்ள சகல ஜாதிகளுக்குள்ளும் ஆசீர்வதிக்கப்படும்.”** ஆதி. 26:5 ன்படி நம் சந்ததி மூலமாக தேசத்தில் வாழும் அநேக அன்பு ஜனங்களுக்கு, குறிப்பாக பீல் ஆதிவாசி விசுவாச குடும்பத்தில் உள்ள ஆதிவாசி மாணவர்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபித்து அவர்களின் கல்விப் பணிக்காக உதவி செய்வோம். இந்த சிறியரில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே (இயேசுவுக்கு) செய்தீர்கள். மத். 25 : 40 தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

**“பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.”** நீதி 22 : 6

## ஷாலோம் *CBC (VBS)* இயக்குநர்கள் & ஆசிரியர்கள் பயிற்சி - 2015

இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தேவ கிருபையினால் இந்த ஆண்டு ஷாலோம் திருச்சபையின் மூலம் மூன்று மாநிலங்களிலும் CBC நடத்தும்படியாக ஜெபத்துடன் ஆயத்தமானோம். இதற்கென்று தெரிந்துக் கொண்ட தலைப்பு **"இயேசுவில் நிலைத்திரு"** என்ற கருத்தின் அடிப்படையில் வேதத்திலிருந்து 10 பாடங்கள் 10 நாட்களுக்கு தயாரிக்கப்பட்டது. அதற்குரிய மனப்பாட வசனங்களும், வரைபடங்களும், அபிநய பாடல்களும், குறுநாடகங்களும், Charts மற்றும் Posters தயாரிக்கப்பட்டது. குறிப்பாக **40,000 Work Books** (சிறுவர்களுக்கு) மற்றும் 1200 Teachers Guide (ஆசிரியர்களுக்கு) ஹிந்தி மற்றும் குஜராத்தில் அச்சடிக்கப்பட்டது. மட்டுமல்லாமல் **"நிலைத்திரு"** என்ற கருத்தின் அடிப்படையில் 13 பாடல்கள் எழுதி ராகம் அமைத்து Audio CD ஆக வெளியிடவும் தேவன் கிருபை செய்தார்.

ஏப்ரல் 21, 22 தேதிகளில் குஜராத்தில் ஏப்ரல் 23, 24 மற்றும் மே 1,2 தேதிகளில் மத்தியப்பிரதேசத்திலும், ஏப்ரல் 27, 28 மற்றும் 29, 30 தேதிகளில் இராஜஸ்தானிலும் சுமார் 10 நாட்கள் பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இதில் குஜராத்தில் 321 பேரும் மத்தியப்பிரதேசத்தில் 580 பேரும் இராஜஸ்தானில் 413 பேரும் **மொத்தம் 1314** பேர் பயிற்சி பெற்றார்கள். பயிற்சி மட்டுமல்லாமல் சிறுவர் ஊழியத்தைக் குறித்தும் அதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தைப் பற்றியும் குறிப்பாக ஆத்தும பாரத்தையும் 40,000 சிறுவர்களை இயேசுவண்டை வழிநடத்த வேண்டும் என்ற பாரத்தையும் பெற்றுக் கொண்டார்கள். இந்த CBC பயிற்சிகளில், **பேராயர். வே. தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் **சகோ. கிளாட்சன் டைட்டஸ்** ஆகியோர் சிறப்புச் செய்தி வழங்கினார்கள். CBC பயிற்சிகளை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் முழுவதுமாக பொறுப்பேற்று நடத்தினார்கள்.

## ஷாலோம் CBC (VBS) வகுப்புகள்

தேவனுடைய கிருபையால் இந்த ஆண்டும் **மே 7ம் தேதியிலிருந்து 17ம் தேதி வரை CBC வகுப்புகள்** நமது ஷாலோம் பணித்தளங்களில் நடைபெற்றன. மொத்தம் **640 மையங்களில்** நடைபெற்ற CBC ல் சுமார் **40,000 சிறுவர்கள்** பங்கு பெற்று மிகவும் உற்சாகமாய் கலந்துக் கொண்டு மனப்பாட வசனங்களையும் பாடல்கள் மற்றும் கதைகளை கற்றுக் கொண்டும் தேவாசீர்வாதம் பெற்றுள்ளார்கள்.

சிறுவர்கள் பாவத்திலிருந்து விடுதலைப் பெற்று இயேசுவை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். **"முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்."** என்ற கருத்து வசனத்தின்படி வாழ்நாள் முழுவதும் இயேசுவில் நிலைத்திருக்கும்படியாய் அர்ப்பணித்தார்கள். பிற இன சிறுவர்களும் வந்து CBC–ல் பங்கு பெற்று இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். சபையின் மூப்பர்கள் மற்றும் விசுவாசிகள் ஒவ்வொருநாளும் CBCல் தங்கள் குடும்பத்தின் சார்பில் சிறுவர்களுக்கென்று சாப்பாடு, சிற்றுண்டி, இனிப்புகள் என்று கொண்டு வந்துக் கொடுத்து சிறுவர்களை உற்சாகப்படுத்தினார்கள். **17ம் தேதி ஷாலோம் CBC ஞாயிறாக** ஆசரிக்கப்பட்டது. அந்த ஆராதனையில் பெற்றோர்கள், விசுவாசிகள், மூப்பர்கள் முன்னிலையில் சிறுவர்கள் தாங்கள் CBC-ல் கற்றுக் கொண்ட பாடல் மற்றும் வசனங்கள் கதைகள் குறுநாடகங்கள் என்று சபையார் முன் நடத்திக் காட்டினார்கள். பெற்றோர்களும் அதிக மகிழ்ச்சி அடைந்தார்கள். அநேக பிள்ளைகள் சாட்சி கூறி தேவனை மகிமைப் படுத்தினார்கள்.



# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

தேவனுடைய பெரிதான கிருபையினால் இதுவரை சுமார் 1 இலட்சத்திற்கும் அதிகமான ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருச்சபையில் சேர்ந்துள்ளார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து திருமுழுக்குப் பெற்றவர்கள் வாரந்தோறும் 700 கிராமங்களில் கூடி ஆராதிக்கிறார்கள். இதுவரை 305 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 20.11.2009 அன்று தேவக் கிருபையால் திருச்சபைகள் திருமண்டலமாக (Shalom Diocese In India) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தேவனுக்கே மகிமை!

## செய்யவேண்டிய வேலையோ மிகப் பெரியது

தேவ கிருபையால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட 500 க்கும் அதிகமான நம் பீல் சுதேச மிஷனெரிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் நற்செய்தியை அறிவித்து பாவங்கள், சாபங்கள் நோய்களிலிருந்து மக்கள் திரளாக கிராமம் கிராமங்களாய் இயேசுவைச் சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள். 600 க்கும் அதிகமான கிராமங்களில் சபைகள் கூடி ஆராதனை நடைபெற்று வருகிறது. இந்த வருடத்தில் குறைந்தது 100 கிராமங்களில் ஆலயங்களைக் கட்ட திறந்த வாசல்களையும், வாய்ப்புகளையும் தேவன் தந்துள்ளார்.

மேலும் 7000 கிராமங்களில் வாழும் பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க விசேஷ அபிஷேகம் பெற்ற 48 சுதேச ஊழியர்கள் 12 குழுக்களாக மாதந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை 48 கிராமங்களில் நடத்துகிற நற்செய்திக் கூட்டங்கள் மூலமாக தேவன் பல அற்புத அடையாளங்களை நடத்தி வருகிறார். அதன் மூலமாக ஒவ்வொரு மாதமும் பல நூறு குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

25 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்பு 7 மூப்பர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சுதேச ஊழியர் தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்டுவதற்குக் கொடுக்க முன் வருகிறார்கள். குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் 30 x 18, 40 x 20, 50 x 20 அளவுகளில் முறையே 2 இலட்சங்கள், 3 இலட்சங்கள், 5 இலட்சங்கள் நிதி உதவி கொடுத்து ஆலயம் கட்டித் தரும் ஆதரவாளர்கள் தேவை. நீங்கள் சபையாக, குழுவாக, குடும்பமாகக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.



## பணித்தளங்களில் கட்டப்பட்டுவரும் கிராம ஆலயங்களில் ஒரு சில







## 2015 ஆம் வருடத்தில் 100 கிராம ஆலயங்களைக் கட்டி எழுப்ப

✞ ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 100 பேர்கள் (அல்லது)

✞ ரூ. 1 இலட்சம் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 200 பேர்கள் (அல்லது)

✞ ரூ. 50,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 400 பேர்கள் (அல்லது)

✞ ரூ. 20,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 1000 பேர்கள் (அல்லது)

✞ ரூ. 10,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 2000 பேர்கள் (அல்லது)

✞ தங்களால் முடிந்த காணிக்கைகளைக் கொடுத்து இந்த தேவத் திட்டத்தை நிறைவேற்றும் ஆதரவாளர்களை தேவன் எழுப்பித் தரும்படியாக ஜெபிப்பதோடு நீங்களும் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெறுங்கள்.

- உங்கள் சபையில் சிறப்புக் காணிக்கைக் கொடுப்பவர்களை எழுப்பி சபை மூலமாக ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.
- உங்கள் குடும்பத்தின் சார்பிலோ அல்லது உங்களது உறவினர்கள் நண்பர்களுக்கு இந்த ஊழியத்தினை அறிமுகம் செய்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.

**ரூ. 3 இலட்சங்கள் மற்றும் ரூ. 2 இலட்சங்கள் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்களுக்கு தனி கிராம ஆலயம் கொடுக்கப்படும், ஆலய பிரதிஷ்டை DVD மற்றும் புகைப்படங்கள், அறிக்கை ஆகியவை அனுப்பி வைக்கப்படும். மற்ற நிதியாளர்களுக்கு இணைந்து கட்டப்பட்ட ஆலயத்தின் படங்கள், DVD மற்றும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும்.**

**நிதி உதவி அனுப்பும் போது *Sharing Love Mission* என்றபெயருக்கு (Tuticorin Branch) D.D. or Cheque எடுத்து 100 கிராம ஆலய கட்டுமானப் பணிக்கான சிறப்பு நிதி என்று குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம். மேலும் எங்கள் அலுவலகம், முன்னேற்றப் பணியாளர்கள், பிரதிநிதிகளிடம் கொடுத்து ரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | SHARING LOVE MISSION (Tuticorin Branch) |
| TMB வங்கிக் கணக்கு எண் | : | 106100710400009 (I F S Code : TMBL0000106) |
| Axis வங்கிக் கணக்கு எண் | : | 105010100094373 (IFS Code : UTIB0000105) |
| ICICI வங்கிக் கணக்கு எண் | : | 613901112799 (IFS Code : ICIC0006139) |

# ***பீல் ஆதிவாசிகள் மேல் ஆதிதேவனின் அன்பு***

***கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,*** சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் **"இயேசு விசாரிக்கிறார் அசெம்பிளி"** தலைமை **போதகர் இறையன்பு V. ஜான்** ஆகிய நான் ஏப்ரல் 29–30 ஆகிய தேதிகளில் **"ஷாலோம்"** குஜராத் ஊழியங்களை பார்வையிடவும் ஒரு ஆலயத்தை பிரதிஷ்டை பண்ணவும் போயிருந்தேன். ஆஹா, இரண்டு நாட்களும் காலை முதல் இரவு வரை என்னை நன்றாக பயன்படுத்திக் கொண்டனர். இரண்டு நாட்களும் **சகோ. ஜெயராஜ்** அவர்களோடு இணைந்து குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களிலிலுள்ள சுமார் 20 பணித்தளங்களுக்கு சுமார் 300 கிலோ மீட்டர் தூரம் காரிலேயே பிரயாணம் செய்து, மேடு பள்ளங்களில் ஏறி இறங்கி ஊழியத்தை நிறைவேற்ற தேவன் கிருபை செய்தார். ஷாலோம் ஊழியர்கள் என்னை நன்றாக கவனித்துக் கொண்டனர்.

இந்த பீல் மக்களுக்காக யாருமே கவலைப்படுவதாகவே தெரியவில்லை. ஷாலோம் மிஷனரி ஊழியங்கள் தான் கவலைப்படுகிறது. இம்மக்கள் வாழும் பகுதிகளில் தெரு வசதி, சாக்கடை வசதி, மின்சாரம், குடிதண்ணீர் வசதி, கடைகள், போக்குவரத்து வசதிகள், ஏரி, குளங்கள், ஆறுகள், கல்லூரிகள், பள்ளிகள் இப்படிப்பட்ட எந்த ஒரு அடிப்படை வசதியும் இல்லை.

ஆயினும் ஷாலோம் ஊழியங்கள் மூலம் சந்திக்கப்பட்ட ஜனங்கள் மட்டும் அழகாகவும், ஆசீர்வாதமாகவும், நாகரீகமாகவும் உள்ளனர். ஒவ்வொரு பீல் ஆதிவாசி கிராமங்களிலும் மலைமேல் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இராஜஸ்தானிலுள்ள காளியா என்ற கிராமத்தில் எங்களது சபை மூலமாக கொடுக்கப்பட்ட நிதி உதவியினால் கட்டப்பட்ட ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். எப்படித்தான் ஷாலோம் ஊழியக்குழுவினர் மலைகளின் மேல் ஆலயம் கட்டுகிறார்களோ? பார்த்த நமக்கு ஆச்சரியமாகவுள்ளது. ஒவ்வொரு ஆராதனையிலும் **"பீல்"** மக்கள் ஆண்டவரை பாடி ஆடி ஆராதிக்கும் போது **"ஆதிதேவன்"** அவர்கள் மேல் அன்பின் ஆவியை ஊற்றி அவர்களை அவர் எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறார். வட இந்தியாவில் தேவன் வல்லமையாய் செயல்படுகிறார் என்பதற்கு இம்மக்களே சாட்சியாகும். மேலும் கோய்க்கா, கும்புரா கிராம ஆலயங்களை பார்வையிட்டோம். பின்பு இராஜஸ்தான், செவன்யா கிராமத்தில் நடைபெற்ற ஊழியர்கள் கூடுகையில் பங்கு பெற்று சிறுவர் ஊழியத்தின் அவசியத்தைக் குறித்து பகிர்ந்து கொண்டேன்.

இந்த 1 கோடி பீல் மக்களும் நம் காலத்திலேயே சீக்கிரம் சந்திக்கப்பட்டு இரட்சிக்கப்பட்டு விடுவார்கள் என்ற இலட்சியத்தோடு ஷாலோம் ஊழியங்கள் முன்னேறி செல்கிறது. இன்னமும் நூற்றுக்கணக்கான ஆலயங்கள் கட்டப்பட வேண்டும். ஊழியர்கள் எழுப்பப்பட வேண்டும். பலவித உபகரணங்கள் வாங்கப்பட வேண்டும். தேவைகள் கோடிகணக்கிலிருக்கிறது, இதை வாசிக்கிற நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நாங்கள் நான்கு லட்சம் ரூபாய் செலவில் 2 ஆலயங்கள் கட்ட உதவி செய்துள்ளோம். மாதந்தோறும் 1 மிஷனரியை தாங்கவும், ரசீது புத்தகம் மூலம் கிடைக்கிறதை வசூலித்துக் கொடுக்கவும் அர்ப்பணித்துள்ளோம். நீங்களும் தனியாகவோ, குடும்பமாகவோ, சபையாகவோ ஏதாவது இயேசுவுக்காக ஷாலோம் ஊழியங்களுக்காக செய்ய முன்வாருங்கள். கிறிஸ்துவுக்காக கொடுத்தவர் எவரும் தரித்திரர் ஆனதில்லை.

சபை போதகர்களே, விசுவாசிகளே, **"பீல்" மக்களுக்காக "FEEL" பண்ணாமல் கொடுங்கள், "FEELING"–டன் ஜெபியுங்கள்.**

– தேவ பணியில் : ***Pr. இறையன்பு V. ஜான்,*** சென்னை

# Pr. இறையன்பு ஜாண் (சென்னை) அவர்களின் பணித்தள வருகை



காளியா கிராம ஆலய பிரதிஷ்டையின் போது மேள தாளங்களுடன் வரவேற்பு




காளியா கிராம ஆலயத்திற்கு முன்பு விசுவாசிகளுடன்



காளியா கிராம ஆலய பிரதிஷ்டை வேளை



கூடியிருந்த ஆலய விசுவாசிகள்



சபையார் வரவேற்பு



தேவ செய்தியளிக்கும் Pr. இறையன்பு ஜாண் அவர்கள்



சபைக்கு வழங்கப்பட்ட இசைக்கருவிகள் மற்றும் ஒலிபெருக்கி சாதனங்களுடன்



மேந்திகேடா (ம.பி.) கிராம ஆலயத்திற்கு முன்பு

# சிலுவை தியானக் கூட்டங்கள் - 2015

## C.S.I. கிறிஸ்துநாதர் ஆலயம், நேதாஜி நகர், சென்னை - மார்ச் 13,14,15-2015



தேவ செய்தி : பேராயர். வே. தேவதாஸ் அவர்கள்



ஊழிய அறிமுகம் : சகோ. ஜெயசிங் அவர்கள்





தேவ வசனத்தை வாஞ்சையுடன் கேட்கும் சபை விசுவாசிகள்

## Praise Prayer Centre சபை பிரதிஷ்டை விழா - 14.04.2015, திருநெல்வேலி



ஆலய பிரதிஷ்டை வேளை



தேவ செய்தி – பேராயர் தேவதாஸ் அவர்கள்



பேராயர் அவர்களுக்கு சிறப்பு அன்பளிப்பு



Pr. [illegible] அவர்கள் குடும்பத்தினருடன் பேராயர் தேவதாஸ் அவர்கள்

# சிலுவை தியானக் கூட்டங்கள் - 2015

ஆண்டவருடைய பெரிதான கிருபையினால் சென்னை தண்டையார்பேட்டை, நேதாஜி நகரிலிருக்கும் தென்னிந்திய திருச்சபை சென்னைப் பேராயம் கிறிஸ்து நாதர் திருச்சபையில் வைத்து 2015 மார்ச் 13,14,15 ம் தேதிகளில் சிலுவை தியானக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஷாலோம் ஊழியத்தின் ஸ்தாபகர் **பேராயர். வே. தேவதாஸ்** அவர்கள் சிலுவை தியான செய்தியைக் கொடுத்தார்கள். ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனையில் செய்தி அளித்தார்கள். இந்த 3 நாள் கூட்டத்திலேயும் வந்திருந்த அனைவரையும் தேவன் கல்வாரி அன்பினால் நிரப்பினார். குறிப்பாக கடைசி நாள் மாலை கூட்டத்தில் சிறுவர்கள், வாலிபர்கள், பெரியவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் நிரப்பப்பட்டார்கள். அநேகர் மிஷனெரி பாரத்தையும், ஆத்தும தாகத்தையும் பெற்றுச் சென்றார்கள். **அநேகர் சாட்சிகள் கொடுத்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.** அவற்றுள் சில :

**1. என்னுடைய பெயர் பூஜா.** இந்தக் கூட்டத்தில் பிஷப் அவர்களது உருக்கமான ஜெபம், நமக்காக அல்லாமல் நம் தேசத்திற்காக ஜெபித்த ஜெபம் நம்மையும் மாற்றும்படியாக இருந்தது. இனி நமக்காக அல்லாமல் இந்த பீல் மக்களுக்காக நாம் ஏதாகிலும் செய்ய வேண்டுமென்ற வாஞ்சை வந்துள்ளது. இந்த பிள்ளைகளுக்காக நாம் உதவி செய்யவேண்டும். அவர்களுக்காக ஆலயங்கள் கட்ட நாம் முன் வரவேண்டும்.

**2. என்னுடைய பெயர் தீபா.** பிஷப் அவர்களுடைய செய்தி வித்தியாசமானதாக இருந்தது. நாம் பீல் மக்களுக்காக ஏதாகிலும் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் வந்திருக்கிறது. எல்லாக் கூட்டங்கள் போலவும் இல்லாமல் இந்தக் கூட்டம் ஒரு வித்தியாசமானதாக இருந்தது. எங்களுக்கு இந்தக் கூட்டம் ஆசீர்வாதமாக இருந்தது.

**3. சபை மூப்பர் :** இந்த ஆலயத்தில் இப்படிப்பட்ட வித்தியாசமான செய்தியை கேட்க கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். எல்லோருமே என்னை ஆசீர்வதியும் என்றே ஜெபத்தில் கேட்போம் ஆனால் இந்தச் செய்தி அப்படியில்லாமல் மற்றவர்களுக்காக ஜெபிக்கவும். சிறுவர்கள், வாலிபர்களுக்காக ஜெபிக்கவும் நம்மை ஊக்கப்படுத்தியிருக்கிறது. இப்படிப்பட்ட செய்தியை நான் கேட்டதே இல்லை. வித்தியாசமானதாக இருந்தது. பிஷப் அவர்களையும் பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

இந்தக் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தின **Rev. ஜாண் பெனியன்** அவர்களுக்கும் சபை ஊழியர். **சகோ. ஜாண் பீட்டர்** அவர்களுக்கும், பொறுப்பேற்று நடத்தின **சகோ. D.S.சகோதரர்கள் குடும்பத்தினருக்கும்.** குறிப்பாக **சகோ.** ஜெயசிங் அவர்களுக்கும் ஷாலோம் பிரதிநிதியாக செயல்பட்டு வருகிற **சகோ. ஜாண்சன், சகோதரி. பெட்சி ஜாண்சன்** அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

தேவனுடைய பெரிதான கிருபையினால் 15.03.2015 ஞாயிறு அன்று சென்னை, எழும்பூர், **CSI தூய யோவான் ஸ்நானகன் ஆலயத்தில்** காலை 8.00 மணி ஆராதனையில் நமது ஷாலோம் **பேராயர். வே. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Rev. லெனார்ட் பாஸ்கர்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். **தேவனுக்கே மகிமை !**

# ***PRAISE PRAYER CENTRE*** ***ஆலய பிரதிஷ்டை விழா,*** ***திருநெல்வேலி – 14.04.2015***

***கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!*** எனது பெயர் **Pr. அலெக்ஸ்.** நானும், எனது குடும்பமும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பழையபேட்டை என்னும் கிராமத்தில் கடந்த 18 ஆண்டுகளாக கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றி வருகிறோம். கடந்த 3 வருடங்களாக ஷாலோம் மிஷனரி ஊழியத்தை ஜெபத்தினாலும், எங்களால் இயன்ற பொருளாதார உதவிகளாலும் தாங்கி வருகிறோம். கடந்த 2013–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் எங்களது எளிய ஆலயத்திற்கு வருகை தந்து, அளித்த **"சின்னவன் ஆயிரமும் சிறியவன் பலத்த ஜாதியுமாவான்"** என்ற வாக்குத்தத்த செய்தியின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் பலத்த கிரியை செய்தார்.

அந்த நாளில் சபையில் இருந்த அநேக தேவைகளின் மத்தியிலும் சபையார் அனைவரும் இணைந்து பீல் மக்களின் ஊழியத்திற்காக **ரூ. 17 ஆயிரம்** காணிக்கையாகக் கொடுத்தோம். பேராயர் அவர்கள் எங்களது ஆலயம் விரைவில் பெரிய ஆலயமாக கட்டப்பட பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் தமது தாசனது ஜெபத்தையும் எங்கள் மக்களின் விண்ணப்பத்தையும் ஏற்று, **ரூ. 17 இலட்ச ரூபாய்** மதிப்பில் புதிய ஆலயத்தைக் கட்ட உதவி செய்துள்ளார். **தேவனுக்கே மகிமை!** எங்களது ஆலயத்தின் மறு பிரதிஷ்டைக்காக எங்களது வரவேற்பை ஏற்று 14.04.2015 அன்று வருகை புரிந்திருந்த **பேராயர் தேவதாஸ்** ஐயா அவர்கள் எங்கள் ஆலய கட்டிடத்தை ஜெபித்து பிரதிஷ்டை செய்தார்கள். மேலும் **ஆலயத்தின் மூலம் தேவன் தரும் ஆசீர்வாதங்கள்** என்ற தலைப்பில் கர்த்தருடைய செய்தியைக் கொடுத்து ஜெபிக்கும் வேளையில், விசுவாசிகள் அனைவரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் விடுதலை, ஆசீர்வாதம் பெற்றதோடு அபிஷேகத்தால் நிரப்பப்பட்டனர்.

கர்த்தர் என்னையும் **(அலெக்ஸ்)** எனது மனைவியையும் **(திலகா)** பிள்ளைகளையும் **(அக்ஷா இவாஞ்சல், ஜோஸ்வா)** கொண்டு ஜனங்களை தம்மண்டைக்கு திருப்புகிறார். நானும் எங்கள் சபையும் ஷாலோம் மிஷனரி ஊழியத்தை ஜெபத்தினாலும் உதவிகளாலும் தாங்குவதை ஆசீர்வாதமாக கருதுகிறோம். எங்களுக்காக கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள். **தேவனுக்கே மகிமை!**

**நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் இருக்கிறோம். (ஏசாயா 8:18)**

***அறிவிப்பு!***

நமது ஷாலோம் ஊழியத்தில் தூத்துக்குடி முன்னேற்றப் பணியாளராக கடந்த ஐந்து ஆண்டு காலமாக ஊழியம் செய்து வந்த **சகோ. ரத்தீஸ் குமார்** அவர்கள் நம் ஷாலோம் ஊழியத்திலிருந்து கடந்த ஏப்ரல் 16ம் தேதி முதல் விலகிக் கொண்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# பணித்தள பார்வை

**Rev.** சாமுவேல் செல்வராஜ், மதுரை.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் நானும், எனது மனைவி **சரோஜா சாமுவேலும்** 17.04.2015 அன்று வெள்ளி மாலை 3.45 மணிக்கு தாகோத் இரயில் நிலையத்தில் இறங்கினோம். ஷாலோம் மிஷனெரி ஊழிய இயக்கத்தின் ஸ்தாபகரும் ஷாலோம் திருமண்டல பேராயரும் பீல் இனமக்கள் மீது ஆத்தும பாரம் கொண்டவர்களுமான **பேராயர் வே. தேவதாஸ்** அவர்களும், **திருமதி வஹிதா தேவதாஸ்** அவர்களும் எங்களை அன்போடு வரவேற்று தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். அதன்படி அங்கு தங்கினோம். 18.04.2015 சனிக்கிழமை தாகோத்திலுள்ள ஷாலோம் அலுவலக ஊழியர்களுக்கு காலை தியான செய்தி கொடுத்தேன். பின்பு 10.00 மணிக்கு பேராயர், பேராயரம்மா, ஊழியர்கள் மற்றும் நாங்கள் இருவருமாக சேர்ந்து குஜராத் மாநிலத்தின் போர்டி, தனுஷியா ஆலயங்களைப் பார்வையிட்டோம். குந்திகேரா ஆலய ஆராதனையில் பங்கு பெற்றோம். பின்னர் உஸ்வானியா என்ற இடத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்து ஆராதனையில் செய்தி கொடுத்தேன். ஆலயத்திற்கென்று Stranger Box இசைக்கருவிகள் ஜெபித்து வழங்கப்பட்டது.

19.04.2015 ஞாயிறு அன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள தெல்சர் ஆலயத்தில் செய்தி கொடுத்தேன். ஜெரி பணித்தளத்திலுள்ள Compassion Home- ஐ பார்வையிட்டு குழந்தைகளுக்கு செய்தி கொடுத்தேன். பின்பு மசூரியா என்ற இடத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்து ஆராதனையில் செய்தி கொடுத்தேன். மதுரையைச் சேர்ந்த **திரு. P.N.** ராஜாசிங் அவர்கள் வழங்கிய Stranger Box இசைக்கருவிகள் ஜெபித்து வழங்கப்பட்டன. 20.04.2015 திங்களன்று தாகோத்திலுள்ள ஷாலோம் மிஷன் மருத்துவமனையைப் பார்வையிட்டோம். காட்டா என்ற கிராமத்தில் (காட்டா – 3) புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆலயத்தை ஜெபித்து பிரதிஷ்டை செய்தோம். தூத்துக்குடியிலுள்ள ஷாலோம் அலுவலக மேலாளர் **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் ஜெபித்து திறந்து வைத்தார்கள். பின்னர் பிஜல்பூரிலுள்ள பாடசாலையையும், மாணவர் விடுதியையும் பார்வையிட்டோம். பின்பு கொய்க்காலாவிலுள்ள ஆலயத்தைப் பார்வையிட்டோம். 21.04.2015 செவ்வாய்கிழமை காலை அங்கிருந்து புறப்பட்டு மதுரை வந்து சேர்ந்தோம்

**நான் கண்ட ஷாலோம் ஊழியம் :**

குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களிலுமுள்ள பீல் இன மக்களுக்காகவே **பேராயர் தேவதாஸ்** அவர்களும், **திருமதி வஹிதா தேவதாஸ்** அவர்களும் தங்கள் வாழ்வை குடும்பமாய் அர்ப்பணித்து மிகவும் ஆத்தும பாரத்தோடும், தரிசனத்தோடும், ஜெபத்தோடும் இக்கடினமான ஊழியத்தை நிறைவேற்றி வருகின்றார்கள். 3 நாட்களும் இருவரும் எங்களோடு வந்து ஆராதனையை நடத்தியது எங்களை மெய்சிலிர்க்க வைத்தது.

**மக்கள் :**

கர்த்தருடைய வார்த்தையை அப்படியே விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்கள். மிகவும் அன்புள்ளவர்கள் தங்களது கலாச்சார அடிப்படையில் எங்களுக்கு வரவேற்பு அளித்தனர். எழுதப்படிக்க தெரியவில்லையென்றாலும் அநேக பாடல்களைப்பாடி இசைக்கருவிகளோடு உற்சாகமாய் ஆண்டவரை ஆராதிக்கின்றனர். காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை சோர்வு இன்றி ஆவியில் நிறைந்து ஆராதிக்கின்றனர்.

**ஊழியர்கள் :**

படித்த ஊழியர்கள் இறையியல் கல்லூரிக்கு அனுப்பப்பட்டு பயிற்சியளிக்கப்படுகின்றனர். அனைத்து ஊழியர்களும் பரிசுத்தாவியின் அபிஷேகத்தினால் நிறைந்து ஜெபிக்கின்றனர், ஆராதிக்கின்றனர். இவர்களுக்கு புதிய பாடல்களைக் கற்றுக் கொடுத்து மாதந்தோறும் கூடுகைகள் ஏற்படுத்தி சகோதரர் பிராங்கிளின், திருமதி வஹிதா தேவதாஸ் இருவரும் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகின்றனர். ஊழியர்கள் விசுவாசத்தோடு ஜெபித்து அற்புதங்கள் நடைபெறுகின்றன.

பேராயர் **அருட்பெருந்திரு தேவதாஸ்** ஐயா அவர்களுக்கும், அம்மா **திருமதி வஹிதா தேவதாஸ்** அவர்களுக்கும் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தரிடத்தில் பண்ணின பொருத்தனையை நிறைவேற்றக் கர்த்தர் கிருபை செய்ததற்காக ஆண்டவரைத் துதிக்கிறோம். நானும் எனது மனைவியும் வந்திருந்த சமயத்தில் எங்களை அன்போடு ஏற்று உபசரித்து பணித்தளங்களைப் பற்றிக் கூடுதலாக அறிந்துக் கொள்ள ஏற்ற உதவிகளைச்செய்து எங்களை கனம் பண்ணினீர்கள். தங்களுக்கும் அம்மாவுக்கும் எங்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியைத் தெரிவிக்கிறோம். மேலும் தங்கள் அலுவலகத்திலுள்ள அனைவருக்கும் எங்கள் அன்பான வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவிக்கிறோம். ஷாலோம் ஊழியத்தைக் குறித்து எமது ஆலயத்தில் பகிர்ந்துக் கொண்டேன். ஊழியங்களுக்காக ஜெபிக்கிறோம். உங்களது தரிசனங்கள் நிறைவேறவும், நல்ல சரீர சுகத்தையும், பெலத்தையும், பாதுகாவலையும் ஆண்டவர் தந்தருள ஜெபிக்கிறோம்.

**Rev. P.S. Samuel Selvaraj,** St.Peter's Church, Tiruppalai, Madurai.

---

## ஷாலோம் முன்னேற்றப் பணியில்

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 03.05.2015 ஞாயிறு அன்று காலை இராமேஸ்வரம் தங்கச்சிமடத்திலுள்ள **New Life Christ Ministries** சபையில் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. டேவிட்** (திருநெல்வேலி) அவர்கள் கலந்து கொண்டு தேவனுடைய வார்த்தையையும் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்து கொண்டார்கள். மேலும் பணித்தளத்திலிருந்து வந்திருந்த சுதேச ஊழியர்கள் தங்களது அனுபவ சாட்சியினை பகிர்ந்து கொண்டனர். கிளை சபையில் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. சந்திரபால்** (மதுரை) அவர்கள் கலந்துக் கொண்டு தேவனுடைய வார்த்தையையும் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்து கொண்டார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Pr. R. ஜேம்ஸ்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

## Rev. P.S. சாமுவேல் செல்வராஜ் அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை

St. Peter's Church, Tiruppalai, Madurai

**18, 19, 20 - 04.2015**



பொக்கா (கோட்டா-3) ஆலயத்தை திறந்து வைத்தார் Rev. சாமுவேல் செல்வராஜ் அவர்கள்



தேவ செய்தி வேளை



பொக்கா (கோட்டா-3) ஆலயத்திற்கு வழங்கப்பட்ட தளவாடங்கள் மற்றும் இசை உபகரணங்கள்



ஊழியர் குடும்பத்தை ஆசீர்வதித்து சிறப்பு ஜெபம்



பொக்கா (கோட்டா-3) ஆலயத்தில் கூடியிருந்த தேவ ஜனங்கள்



ஆரோன் நினைவு மருத்துவமனையில் மருத்துவ ஊழியத்திற்காக ஜெபம்



மகுரியா கிராம ஆலய பிரதிஷ்டை வேளை



உஸ்மானியா கிராம ஆலய பிரதிஷ்டை வேளை

# பீல் ஆதிவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கல்வியறிவு பணிக்கான மிக அவசரத் தேவை



தேவ கிருபையால் சுமார் 580 பீல் சுதேச ஊழியர்களையும், பல்லாயிர விசுவாசக் குடும்பங்களையும் தேவன் சுமார் 600க்கும் அதிகமான கிராமங்களில் தந்துள்ளார், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஊழியம் செய்துவரும் இவர்களின் 1200 பிள்ளைகளின் படிப்பு மிகப் பெரிய தேவை நிறைந்த சவாலாகவே உள்ளது.

சில கிராமங்களில் இன்னும் ஆரம்ப பள்ளிக் கூடங்கள் கூட கிடையாது. மிகவும் உள்ளடங்கிய கிராமங்களில் பள்ளிக் கூடங்கள் இருந்தாலும் அவைகள் சரியாக செயல்படாது. நடுநிலைப் பள்ளிகளுக்கு (8ம் வகுப்பு வரை) செல்ல வேண்டியானால் மாணவர்கள் பல கிலோ மீட்டர் தூரம் நடந்தே செல்ல வேண்டும். உயர்நிலைப் பள்ளிகள் குறிப்பாக 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு படிக்க ஒவ்வொரு தாலுகாவிலும் குறைந்த பள்ளிகளே உள்ளன, விடுதி வசதிகளும் மிகக் குறைவாகவே உள்ளன. மேலும் அநேகர் வசதியின்றி படிப்பதை நிறுத்தி விடுவார்கள்.



கிராமங்களில் மின்சார வசதி கிடையாது, சரியான Tuition வசதி கிடையாது. குடிகாரர்கள் நிறைந்த கிராமங்கள் உள்ளன. மேலும் படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை முற்றிலும் கிடையாது. வெளியிடங்களுக்குச் சென்று நல்லப் பள்ளிக் கூடங்களில் படிப்பினை பெற்றுக் கொள்ள வாய்ப்புகள் இருந்தாலும், பொருளாதார வசதிகள் அவர்களுக்குக் கிடையாது. விசுவாசிகள், மற்றும் ஊழியர்களின் பிள்ளைகள் நன்கு படித்து முன்னேற வாஞ்சையுடன் உள்ளார்கள். அவர்களுக்கு வழிகாட்டவும், உதவி செய்யவும் ஜெபித்து கரம் கொடுத்துத் தாங்குவோர் தேவை.



ஆதிவாசி மாணவர்கள் 80% மதிப்பெண்கள் பெற்றுவிட்டால் உயர்கல்வி மற்றும் ஆசிரியர், செவிலியர், கம்ப்யூட்டர் பயிற்சி போன்ற துறைகளில் இலகுவாக இடங்கள் கிடைத்துவிடும்.

200 வருடங்களுக்கு முன்பாக நம்மை தேடி தமிழ்நாட்டிற்கு தேவன் அனுப்பிவைத்த மிஷனெரிமார்கள் கட்டியெழுப்பின தேவ ஆலயங்கள் மட்டுமல்ல எத்தனையோ கல்விக் கூடங்களை கட்டியெழுப்பி, கல்லூரிகளையும், தொழில் நுட்பக் கல்லூரிகளையும் மருத்துவ மனைகளையும் கட்டித் தந்து நன்மை ஆசீர்வாதமான சந்ததியாக உருவாக்கியதை நாம் மறக்க இயலாது. இன்று நம் தலைமுறையில் நம் கண்கள் காண பல்லாயிர பீல் ஆதிவாசி குடும்பங்களில் மாணவச் செல்வங்களுண்டு, நாமும் அந்த மாணவர்களை ஜெபித்துத் தாங்க கடமைப்பட்டுள்ளோம் அல்லவா !



# இம்மாபெரும் கல்விப்பணியில் தேவைகளும், உங்கள் பங்கும்....

**கல்விப் பணிக்கான பிற தேவைகள் (1-8 வகுப்பு வரை)**

அவ்வாறு தாங்கப்படும் மாணவர்களில் (குறிப்பாக நம் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள்) 1 முதல் 8 வரை படிக்கும் மாணவர்களுக்கு கல்வியாண்டின் ஆரம்ப கட்டத்தில் சீருடை, புத்தகங்கள், பேக், நோட் புத்தகங்கள் சுமார் 1100 பிள்ளைகளுக்கு வாங்கி கொடுப்பதற்கு குறைந்தது **ரூ. 8 இலட்சங்கள் தேவைப்படுகிறது.** ஆதிவாசி மாணவரை தாங்குவோர், சுதேச ஊழியர்களை தாங்குவோர் மாத ஆதரவுடன் ஒரு மாணவருக்கு ரூ. 500 அல்லது அதற்கு அதிகமாகவும் அனுப்பினால் உதவியாய் இருக்கும், மற்றவர்கள் இந்த தேவையில் ஒரு பங்கினை அனுப்பி ஆதிவாசி மாணவரின் கல்வி தேவைகளை சந்தித்து அவர்களை உற்சாகப்படுத்தி தேவ ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மிக மிக அவசரமாக தேவைப்படும் உயர் கல்விக்கான நிதி உதவி (10th, 12th மற்றும் கல்லூரி)**

- மேலும் 10,11,12 ம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் கிராமங்களிலிருந்து உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்காக நகர்ப்புறங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. அங்கு போதிய விடுதி வசதியில்லாதபடியால், தனி அறைகளை வாடகைக்கு எடுத்து சாப்பாடு செய்து, உண்டு, படிக்க வேண்டிய சூழ்நிலைகள் உள்ளது. அநேக மாணவர்கள் நல்ல மதிப்பெண்களை எடுக்க சிறப்பு டியூசன் எடுத்து படிக்கிறார்கள். இவர்களுக்கு வருடம் ரூ. 20,000 வீதம் 5 வருடங்களுக்கு, கல்லூரி படிப்பு வரை தேவைப்படுகிறது. இதற்காக 150 ஆதரவாளர்கள் தேவை.
- மேலும் சிலர் +2 முடித்து ஆசிரியர், செவிலியர் மற்றும் கம்ப்யூட்டர் சேர்க்க மேலும், B.Sc., B.A., போன்ற பட்டங்களை பெற உயர் படிப்புக்கு ஆயத்தமாகி வருகிறார்கள். இவர்களுக்கு வருடத்திற்கு ரூ.30,000 வீதம் 3 வருடத்திற்கு உதவித் தொகை தேவைப்படுகிறது. இவர்களுக்கு முழுமையாகவோ, பகுதியாகவோ, நிதி உதவியை சபையாகவோ, குடும்பமாகவோ தாங்க முன்வர அன்புடன் அழைக்கிறோம். இதற்காக 60 ஆதரவாளர்கள் தேவை.
- இம் மாணவர்கள் படித்து நல்ல வேலைக்கு வந்தப் பின் அவர்கள் குடும்பத்திற்கு ஆசீர்வாதமாகவும், சபைக்கு தசம பாகம் தந்து ஆசீர்வதிப்பவர்களாகவும், தேசத்தின் ஆசீர்வாதத்திற்கு காரணராயும் விளங்குவார்கள் என்பதும் சந்தேகமில்லை.
- தேவ கிருபையால் **Sharing Love Mission** மிஷனெரிப் பணியின் சார்பு பணியாக உருவாக்கியுள்ள **Shalom Charity Mission** மூலமாக கல்வி, மருத்துவம் மற்றும் முன்னேற்றப் பணிகளை கடந்த ஐந்து ஆண்டுகளாக நடத்தி வருகிறோம். இது வரையில் 1100 மாணவர்கள் ஷாலோம் பள்ளி, விடுதி மற்றும் நேரடியான கல்விப் பணிக்கான நிதி உதவிகளைப் பெற்று வருகிறார்கள்.
- உங்கள் காணிக்கையைப்பெற்ற நிதி உதவிகளை பீல் ஆதிவாசி மாணவர்கள் கல்விப் பணிக்கென்று **Shalom Charity Mission** என்ற பெயரில் D.D. / Cheque or M.O. மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பும்படி அன்புடன் கேட்கிறோம்.
- நீங்கள் **Shalom Charity Mission** என்ற பெயரில் நீங்கள் அனுப்பும் காணிக்கைக்கு **80G** வரி விலக்கு உண்டு என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். நாங்கள் முன் வரும் ஒவ்வொருவருக்கும் சிறப்பு அறிக்கையும் புகைப்படமும் அனுப்பி வைக்கப்படும்.

**நீங்களே இவர்களுக்கு போஜனங் கொடுங்கள் - கிறிஸ்து இயேசு**

ஷாலோம் கிராம ஆலயம்

## காளியா இராஜஸ்தான்



காளியா என்ற கிராமம் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டம் குசல்கட் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்த கிராமத்தைச் சேர்ந்த சகோ. பதா கட்டாரா அசுத்த ஆவிகளை வணங்கி வந்தார். இவருடைய பிள்ளைகள் அனைவரும் அடிக்கடி வியாதியினால் பாதிக்கப்பட்டனர், தொடர்ந்து 4 பிள்ளைகளும் இறந்து விட்டனர். இதனால் மற்ற பிள்ளைகளும் மரித்து விடுவார்களோ என பயந்து பக்கத்து கிராமத்தில் நடைபெற்ற ஷாலோம் கூட்டத்திற்கு மற்ற 3 பிள்ளைகளையும் கூட்டிச் சென்றார். அங்கு சகோ. பக்ருல்சந்திர ஹுடா அவர்கள் பிள்ளைகளுக்காக ஜெபித்தபோது இந்த 3 பிள்ளைகளையும் தேவன் காப்பாற்றினார். இதனால் இவர் குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டு ஊழிய அழைப்பைப் பெற்று தன் வீட்டிலேயே கூட்டம் நடத்த ஆரம்பித்தார் இவர் தன் நிலத்தை காணிக்கையாக கொடுக்க அந்த இடத்தில் சகோ. பாஸ்கர், (தூத்துக்குடி) மற்றும் சகோ. தனசிங் மோசே (சென்னை) ஆகியோரின் குடும்பத்தின் சார்பில் கொடுத்த நிதி உதவியினால் ஆலயம் கட்டப்பட்டு பேராயர் தேவதாஸ் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஷாலோம் கிராம ஆலயம்

## மசூரியா மத்தியப்பிரதேசம்



மத்தியப்பிரதேச மாநிலம் ஜாபுவா மாவட்டத்தில் பீல் ஆதிவாசி மக்கள் வாழும் கிராமம் தான் மசூரியா. இங்குள்ள மக்கள் மிகவும் கொடூரமானவர்கள். காவல் துறையினராலும் இவர்களை கட்டுப்படுத்த முடியாது. இவர்களில் ஒருவர் தான் சகோ. சாதாபாய் இவர் 3 வருடமாக இடுப்புக்கு கீழ் செயல்படாமல் படுத்த படுக்கையாக இருந்தார். இவர் அதற்காக மந்திரவாதிகளிடம் சென்று பூஜைகள் செய்தும் பலனில்லாமல் போகவே இறுதியில் பக்கத்து கிராமமாகிய காச்லாவில் ஊழியம் செய்து வரும் ஷாலோம் ஊழியர் காளியா பாபேர் அவர்களை அழைத்து ஜெபித்த போது 6 நாட்களில் தேவன் பூரண சுகம் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் அநேகர் இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டு காச்லா கிராம ஆலயத்திற்கு ஆராதனைக்கு சென்றனர். இந்த சமயத்தில் தன் மருமகளுக்கு ஜெபித்ததில் சுகம் கிடைத்ததால் சகோ. ரூபலா பாய் என்பவர் தன் வீட்டை ஆராதனைக்கு திறந்துக் கொடுத்தார். ஆராதனை தொடர்ந்து நடக்கவே தன் நிலத்தை காணிக்கையாக கொடுத்தார். அங்கு சகோ. காளியா பாபேர் அவர்கள் ஊழியம் செய்து வருகிறார் இந்த ஆலயம் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலம் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்டது.

ஷாலோம் கிராம ஆலயம்

## உஸ்வானியா குஜராத்



குஜராத் மாநிலத்தில் தாகோத் மாவட்டத்தில் இந்த உஸ்வானியா கிராமம் அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள் விக்கிரக ஆராதனை செய்தும் மந்திரங்களைச் செய்தும் வாழ்ந்து வருபவர்கள். இந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தவர் தான் சுரேஷ் டாமோர். இவர் மந்திரவாதியாக இருந்ததினால் பிசாசின் பிடியில் சிக்குண்டவராய் பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இந்நிலையில் அவருக்கு வயிற்றில் இருந்த கட்டியினால் 4 வருடங்களாக மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அதற்காக மந்திரம், மருத்துவம் செய்தும் ஒரு பலனுமில்லாமல் போனது. அந்தச் சமயத்தில் ஷாலோம் ஊழியர் பிரகாஷ் டாமோர் என்பவர் இவருக்காக ஜெபிக்கவே தேவன் இவருக்கு பூரண சுகத்தைக் கட்டளையிட்டார். அதிலிருந்து இவர் ஆராதனைக்கு சென்று கொண்டிருக்கும்பொழுது ஊழிய அழைப்பைப் பெற்றவராய் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். இவருடைய உஸ்வானியா கிராமத்தில் அழகிய ஆலயம் Rev. சாமுவேல் செல்வராஜ் அவர்கள் குடும்பம் கொடுத்த நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டு 19.04.2015 அன்று Rev. சாமுவேல் செல்வராஜ் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஷாலோம் கிராம ஆலயம்

## கால்கண்டுவி மத்தியப்பிரதேசம்



மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் மேக்நகர் பகுதியில் பின் தங்கிய கிராமம் தான் இந்த கால்கண்டுவி. இங்குள்ள மக்கள் இறந்தவர்களின் ஆவிகளை தெய்வமாக வழிபடுவார்கள். மேலும் மாடுகளை களவாடுவதும், திருடுவதுமே இவர்களது தொழில். இந்தச் சூழ்நிலையில் வளர்ந்தவர்தான் சகோ. பத்தியாபாய் டின்டோடு. இவர் தீய பழக்கங்களை உடையவராகவும் மனநிலை சரியில்லாதவரைப் போலவும் அலைந்து வாழ்ந்து வந்தார். இந்தச் சமயத்தில் அவருடைய தகப்பனார் அதிகமாக வியாதிப்பட்டு படுத்த படுக்கையிலிருந்தார். மருத்துவம் மற்றும் மந்திரம் பார்த்து அதிக பணம் செலவழித்துப் பார்த்தும் பலனில்லை. இறுதியாக பக்கத்து கிராமத்தில் நடைபெற்று வரும் இயேசு கூட்டத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு அங்கு சென்றார். அங்கு ஷாலோம் ஊழியர் சகோ. அமர்சிங் வாசுனியா இவருக்கு இயேசுவைப்பற்றி கூறி ஜெபித்தார். அந்நாளிருந்து தேவன் விடுதலைக் கொடுத்தார். அதன்பின் இவர் ஊழியம் செய்ய அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். இந்த கிராமத்தில் ஆலயம் கட்டப்பட்டு ஆராதனை நடைபெற்று வருகிறது. இந்த ஆலயம் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த Dr. Litha Sekar & Dr. Vijitha Felix இவர்கள் குடும்பங்கள் கொடுத்த நிதி உதவியிலிருந்து கட்டப்பட்டதாகும்.

ஷாலோம் கிராம ஆலயம்



# போர்டி குஜராத்

குஜராத் மாநிலத்தில் தாகோத் மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய கிராமம் தான் இந்த போர்டியாகும். இங்கு வாழும் மக்கள் சாராயம் காய்ச்சுவதும், சண்டையிடுவதும், திருடுவதும் தான் தங்கள் தொழிலாகக் கொண்டவர்கள். இந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தவர் தான் சகோ. நன்னு புரியா. இவர் விக்கிரகங்களையும் வணங்கி வந்தார். அதனால் இவருடைய குடும்பத்தில் வறுமை, வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். இந்தச் சூழ்நிலையில் இவர் பக்கத்து வீட்டில் உள்ள ருமால் என்ற சகோதரி இவரிடம் இயேசுவைப் பற்றிக் கூறி ஷாலோம் ஊழியரிடம் அழைத்துச் சென்றார். அந்த ஊழியர் இவருக்காக பாரத்துடன் ஜெபித்த போது தேவன் இவருக்கு பூரண சுகத்தையும், ஆசீர்வாதத்தையும் கொடுத்தார். இதைக் கண்ட இவர் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தேவனுக்கென்று ஊழியம் செய்ய அர்ப்பணித்து தனது கிராமத்தில் ஊழியத்தை ஆரம்பித்தார். இந்தக் கிராமத்தில் சகோதரி. மலர் ராபர்ட் (லண்டன்), சகோ. ரோஷன் அண்டன் (தூத்துக்குடி) மற்றும் சகோ. ஜெயகுமார் (தூத்துக்குடி) ஆகியோர் சேர்ந்து கொடுத்த நிதி உதவிகள் மூலம் ஒரு அழகிய ஆலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு தேவனை ஆராதித்து வருகிறார்கள்.

ஷாலோம் கிராம ஆலயம்



# காட்டா - 3 இராஜஸ்தான்

காட்டா (கடலி ஃபலியா) கிராமம் இராஜஸ்தானிலுள்ள பான்ஸ்வாடா மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சகோ. நார்ஜி டின்டோடு அவர்கள் இயேசுவை அறியாத போது பாவமான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். இவருக்கு திருமணமாகி 5 வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்தது. இந்நிலையில் ஷாலோம் ஊழியர், கல்லு டின்டோடு அவர்களிடம் ஜெபிக்க சென்றார்கள். அங்கு ஊழியர் ஜெபித்ததில் தேவன் குழந்தை பாக்கியத்தைக் கொடுத்தார். பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு தனது சொந்த கிராமமாகிய காட்டா -3 (கடலி பகுதியில்) தனது வீட்டில் கூட்டம் ஆரம்பித்தார், தற்போது 25 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு சபையில் ஆராதித்து வருகிறார்கள்.

ஊழியரின் நிலத்தில் தற்போது புதிய ஆலயம் ஒன்று "பெராக்கா" என்ற பெயரில் கட்டப்பட்டு, 20.04.2015 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் முன்னிலையில் சகோ. சாம் குணசீலன் அவர்கள் ஜெபித்து பிரதிஷ்டை செய்தார்கள். மதுரையைச் சேர்ந்த Rev. சாமுவேல் செல்வராஜ் அவர்கள் ஆலயத்தைத் திறந்து வைத்தபோது தேவ பிரசன்னத்தோடு தேவ பிள்ளைகள், விசுவாசிகள் அனைவரும் ஆலயத்திற்குள் பிரவேசித்தார்கள். இந்த கிராம ஆலயம் தூத்துக்குடியைச் சேர்ந்த சகோ. ஜெபராஜ் (இயேசு குணமாக்குகிறார் ஊழியம்) அவர்கள் ஊழியத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும். தேவனுக்கே மகிமை!



ஷாலோம் கிராம ஆலயம்



# காளியா இராஜஸ்தான்

காளியா என்ற கிராமம் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டம் குசல்கட் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்த கிராமத்தைச் சேர்ந்த சகோ. சங்கு மச்சார் மற்றவர்களிடம் சண்டையிட்டு வாழ்ந்து வந்தார். இந்த சமயத்தில் அவருடைய அம்மாவிற்கு காது கேட்காமல் போய்விடவே இவர் மந்திரகிரியைகள் செய்தும், ஒன்றும் பலனளிக்கவில்லை. அப்போது இந்த கிராமத்திற்கு சுவிசேஷம் அறிவிக்க வந்த சுதேச ஊழியர் தாஜிபாய் அவர்கள் மூலமாக கும்புரா கிராமத்தில் நடைபெற்ற ஆராதனையில் கலந்துக் கொண்டார். அங்கு இவர் அம்மாவிற்காக ஊழியர் ஜெபித்தபோது அற்புதமாக இவர் அம்மாவிற்கு காது கேட்டது. உடனே இவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு வாரம்தோறும் தவறாமல் ஆராதனையில் கலந்து கொண்டு வந்தார். அவருடைய சுபாவம் மாறியது. தன்னைப் போன்று பாவத்திலுள்ள தன் மக்கள் மனம் திரும்பும்படியாக தேவனுக்கென்று தன்னை அர்ப்பணித்து முழுநேர ஊழியம் செய்து வருகிறார். இவர் நிலத்தை காணிக்கையாக கொடுத்தார். இந்த கிராம ஆலயம் சென்னை இயேசு விசாரிக்கிறார் சபையார் மூலமாக Pr. இறையன்பு ஜாண் அவர்கள் அளித்த நிதி உதவியின் மூலமாக கட்டப்பட்டு Pr. இறையன்பு ஜாண் அவர்கள் மூலமாக 30.04.2015 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.



ஷாலோம் கிராம ஆலயம்

# ஜாலத் குஜராத்

குஜராத் மாநிலத்தில் ஜாலத் என்ற கிராமம் உள்ளது. இங்குள்ள மக்கள் தேவதைகளை வணங்கியும் மந்திர பூஜைகள் செய்தும் வாழ்ந்து வந்தார்கள். இவ்வாறு வாழ்ந்தவர் தான் சகோ. மகேஷ் பர்மார். மந்திரபூஜை செய்து பாவமான வாழ்க்கை வாழ்ந்து வந்த சமயத்தில் இவருடைய தாயார் 9 வருடமாக சரீரத்தில் வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவர்களுக்காக மந்திரங்கள் செய்தும் ரூ. 50000 வரை மருத்துவச் செலவு செய்தும் ஒன்றுமே பலனளிக்காமல் இருக்கையில் அந்த கிராமத்து விசுவாசி ஒருவர் வந்து இவரிடம் தனக்கு இயேசு செய்த அற்புதத்தை கூறி இவருடைய தாயாருக்காக ஜெபித்தார். ஜெபித்தவுடனே தேவன் இவர் தாயாருக்கு பூரண சுகம் கொடுத்தார். உடனே இவர் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். பின்னர் அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை ஏற்படவே ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். இங்கு தேவனை ஆராதிக்க ஆலயம் தேவைப்படவே சகோ. ராஜீவன்லால் (மும்பை) அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுத்த நிதியின் மூலம் ஒரு அழகிய ஆலயம் கட்டப்பட்டு தேவ நாமம் மகிமைப்படும்படியாக 10.05.2015 அன்று சகோ. ராஜீவன்லால் (மும்பை) அவர்கள் மூலம் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

# சகோ. சாம் குணசீலன் அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை

18, 19, 20 & 21 - 04.2015



கலாச்சார வரவேற்பு



பொாக்கா (காட்டா-3) ஆலய பிரதிஷ்டை



தேவ செய்தி – சகோ. சாம் குணசீலன்



சிறப்புப் பாடல் – ஷோன் & ஷிப்ரா



தெல்சர் கிராமத்தில் நடைபெற்ற CDC ஆசிரியர் பயிற்சியில்



இராஜஸ்தான் பிஜல்பூர் விடுதி மாணவர்களுடன்



ஷாரோன் நினைவு மருத்துவமனை முன்பு



ரூப்பாகேடா கிராம ஆலயத்திற்கு முன்பு

# பணித்தள பார்வை

**சகோ. சாம் குணசீலன்,** மேலாளர், ஷாலோம் தலைமை அலுவலகம், தூத்துக்குடி.

தேவனுடைய பெரிதான கிருபையினால் 2009ம் ஆண்டிற்கு பின்னதாக இந்த 2015ம் ஆண்டில் ஷாலோம் பணித்தளத்தை குடும்பமாக நேரில் பார்க்க ஆண்டவர் கிருபைசெய்தார். அதற்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். 18.04.2015 அன்று இரவில் **குஜராத் தாகோத்திற்கு** சென்றடைந்தோம். எங்களை **பிஷப். தேவதாஸ்** அவர்களும், **சகோதரி வஹிதா** அவர்களும் மிக அன்போடு வரவேற்றார்கள். 19.04.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று முதலாவது குஜராத் **தெல்சார் கிராமத்தில்** உள்ள விசுவாசிகளை கண்டோம். அவர்கள் தேவன் மேல் வைத்த அன்பின் நிமித்தமாக உற்சாகமாக தேவனை ஆராதித்து கொண்டிருந்தார்கள். அதனை பார்க்கும்போது ஆச்சரியப்பட்டோம். அங்கு வாழ்த்து செய்தி கொடுத்து விட்டு, **வரம்கேடா** கிராமத்தில் உள்ள முதலாவது ஆலயத்தையும், 2வது ஆலயத்தையும் பார்த்தோம். உற்சாகமாக ஆண்டவரைப் பாடி துதித்துக் கொண்டிருந்தார்கள். அந்த விசுவாசிகளை சந்தித்து விட்டு பல தூரமுள்ள **பாட்டன்பூரா** கிராமத்திற்குச் சென்றோம்.

சுமார் 1 மணியளவில் சென்றபோதும் கூட மக்கள் சோர்வில்லாமல் தேவனை அல்லேலூயா.. என்று பாடி கண்களை மூடி ஆராதித்துக் கொண்டிருந்ததை பார்த்து பிரமித்தோம். அந்த மக்கள் எங்களை மிக அன்போடு வரவேற்றார்கள். அதன் பின்பு அவர்களுக்கு தேவனுடைய வார்த்தையைக் கூறி செய்தி கொடுக்கும் போது மக்கள் வசனத்தை மிக கவனமாக கேட்டார்கள். பின்பு ஜெபிக்கும்போது அனைவரும் வல்லமையாக ஜெபித்தார்கள். அனைவரும் தனித்தனியாகவும் ஜெபிக்க வந்தார்கள். அவர்களுக்காக நானும் எனது மனைவியும் மிகவும் பாரத்தோடு ஜெபித்தோம். பெண்களுக்காக என் மனைவி தனித்தனியாக பாரத்தோடு ஜெபித்தாள். அங்குள்ள சுதேச ஊழியர் **சகோ.மங்கு புரியா** அவர்கள் வீட்டில் உணவு கொடுத்து உபசரித்தார்கள். ஆராதனை முடித்த பின்பு கூட ஜனங்கள் ஆலயத்தில் இருந்து வாஞ்சையோடு ஜெபித்துக் கொண்டு இருந்ததை பார்க்கும் போது மிக ஆச்சரியமாக இருந்தது. அதன் பின்பு அநேக மேடுபள்ளங்களைத் தாண்டி **கங்கேலா** என்ற கிராமத்திற்குச் சென்றோம். அங்குள்ள **மூப்பர் சகோ. நகின்பாய்** எங்களை அன்போடு உபசரித்தார். குஜராத் மாநிலத்தில் ஊழியத்தை முடித்து, இரவில் தாகோத் வந்து சேர்ந்தோம்.

அதன் பின்பு 20.04.2015 அன்று காலை பணித்தள அலுவலக ஊழியர்களுக்கு செய்தி கொடுக்க தேவன் உதவி செய்தார். பின்பு Sharon Memorial Mission Hospital- ல் சென்று பார்வையிட்டு **டாக்டர் இன்பகுமார்** அவர்களை சந்தித்து ஜெபித்தோம். பின்பு குஜராத் ஜாலோத் வழியாக இராஜஸ்தான் சென்றோம். அதிக தூரம் சரியான சாலை வசதி இல்லாத கிராமங்கள் வழியாக கடந்துச் சென்று காட்டா கிராமத்திற்கு வந்து சேர்ந்தோம். **காட்டா கிராம** விசுவாசிகள் கொடுமையான வெயில் என்றும் பாராமல் ஆலய பிரதிஷ்டைக்காக தேவனை துதித்து நடனமாடி மகிமைப்படுத்தி கொண்டிருந்தார்கள். பின்பு **பிஷப்** அவர்கள் தலைமையில் நான் ஜெபித்து பிரதிஷ்டை செய்ய ஆண்டவர் உதவி செய்தார். **Rev. சாமுவேல் செல்வராஜ்** அவர்கள் ஆலயத்தைத் திறந்து வைத்தார்கள், தேவ பிரசன்னத்தோடு ஆலயத்திற்குள் சென்றோம். கலாச்சார வரவேற்பு எங்களுக்கு கொடுக்கப்பட்டது. அந்த மக்களுடைய அன்பு மறக்கமுடியாததாகக்

காணப்பட்டது. புதிதாக கட்டிக் கொடுத்த ஆலயத்தில் மக்கள் தேவனை உற்சாகமாக பாடி துதித்தார்கள். அவர்களுக்கு இசைக்கருவிகள், P.A. System வழங்கப்பட்டது. **Rev. சாமுவேல் செல்வராஜ்** அவர்கள் செய்தி கொடுத்தார்கள். ஆராதனை முடிந்தவுடன் அனைத்து விசுவாசிகளுக்கும் அன்பின் ஐக்கிய விருந்து பரிமாரினார்கள். பின்பு வருகிற வழியில் பிஜல்பூர் ஹாஸ்டல் பிள்ளைகளை சந்தித்து அவர்களுக்காக ஜெபிக்க கர்த்தர் கிருபை செய்தார். அந்த பிள்ளைகள் எதிர்காலத்தில் டாக்டர், இன்ஜினியர், போலீஸ், நர்ஸ், ஊழியர்களாக வருவோம் என்று சொல்வதைக் கேட்டபோது வியப்புற்றோம். தேவன் அப்படியே இந்த பிள்ளைகளை வருங்காலத்தில் உயர்த்துவாராக. பின்பு கும்புரா ஆலயத்தையும் கோய்கா ஆலயத்தையும் பார்த்து வந்தோம்.

21.04.2015 ம் தேதியன்று காலையில் மத்தியப்பிரதேச பகுதிகளைக் காணப் புறப்பட்டோம். போகும் பாதையில் குஜராத்திலுள்ள போரடி, தனசியா ஆலயங்களை சந்தித்தோம். பின்பு மத்தியப்பிரதேசம் **அந்தர்வேலியா**வில் உள்ள ஆலயத்தையும் Compass ion Project -ஐயும் பார்த்தோம். வருகிற வழியில் **குந்திகேடா, விசல்பூர், மேந்திகேடா, ரூப்பாகேடா, நெகடியா** கிராம சபைகளையும், ஊழியர்களையும் சந்தித்து ஜெபித்தோம். மத்தியப்பிரதேசத்தில் உள்ள அனைத்து ஊழியர்களும் அநேக எதிர்ப்புகளை சந்தித்து வருவதாக கூறினார்கள். ஒவ்வொரு நாளும் கர்த்தர்தாமே அவர்களைப் பாதுகாத்து வருகிறார். பின்பு தெல்சர் கிராம ஆலயத்தில் குஜராத் சபை பிள்ளைகளுக்கான CBC Training Programme யை கண்டோம். ஆசிரியர்களுக்கும், இயக்குனர்களுக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டது. உற்சாகமாக பாடல்களை கற்றார்கள். இரவில் பணித்தளத்திலிருந்து புறப்பட்டோம்.

பணித்தள ஊழியங்களை குறித்து வார்த்தையிலும், போட்டோ, வீடியோவில் அறிந்துக் கொள்வதைக் காட்டிலும் நேரில் பார்க்கும் போதுதான் உண்மையாக எவ்வளவு கடினமான தேவைகளின் மத்தியில் ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. எத்தனையோ பாடுகள், கஷ்டங்கள், எதிர்ப்புகள், தடைகள் குறிப்பாக நிதி நெருக்கடியின் மத்தியிலும் ஊழியங்களை **பிஷப் தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ்** செய்து வருகிறார்கள். மற்றும் பணித்தள ஊழியர்கள், சுதேச ஊழியர்கள் மிக அதிகமாக உழைக்கிறார்கள். இன்னும் அவர்களை அதிகமாக ஜெபத்தில் தாங்க வேண்டும். 1997ம் ஆண்டு மே மாதத்தில் சிவகாசி, சாட்சியாபுரத்தில் நடைபெற்ற EU Camp –ல் இரட்சிக்கப்பட்ட நான் ஊழிய அழைப்பைப் பெற்று குஜராத் ஜாலோத்திற்குச் சென்றேன். அந்த நாட்களில் எனக்கு சரியாக ஜெபிக்கத் தெரியாது. வேதம் வாசித்தது கிடையாது. அபிஷேகம் கிடையாது. ஆனால் குஜராத்திற்குச் சென்ற பின்புதான் பிஷப். தேவதாஸ் அவர்களும், சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களும் என்னை ஆவிக்குரிய பாதையில் நடத்தினார்கள். 3 ஆண்டுகள் பணித்தளத்தில் இருந்து எனக்கு ஊழிய பயிற்சி கொடுத்தார்கள். அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறேன். பணித்தளத்திற்கு குடும்பமாக சென்று வந்த பின்பு 1 கோடி பீல் ஆதிவாசி ஜனங்களின் இரட்சிப்பின் திட்டத்தில் இன்னும் அதிகமாக ஊழியம் செய்ய வேண்டுமென்று எங்களை அர்ப்பணித்துள்ளோம். இதை வாசிக்கிற நீங்களும் பீல் மக்களின் இரட்சிப்பிற்காகவும், ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இன்னும் அதிகமாக ஜெபிக்கவும், தாங்கவும் அன்போடு கேட்கிறேன்.

சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். வர்சிங் பர்மார்

**சிமளியா, குஜராத்**



இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் வர்சிங் பர்மார். நான் குஜராத்தில் தாஹோத் மாவட்டத்தில் அமைந்துள்ள சிமளியா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இந்திய இராணுவத்தில் பணிபுரிந்துக் கொண்டிருந்தேன். அங்கு மது அருந்துதல், புகைப்பிடித்தல் போன்ற பழக்கங்களுக்கு அடிமையாக இருந்தேன். திடீரென்று புத்தி சரியில்லாமல் போன காரணத்தினால் இராணுவத்திலிருந்து வெளியேற்றப்பட்டேன். பின்பு எனது வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். எனது மாமனார் மற்றும் சகோதரரும் என்னுடைய சுகத்திற்காக மந்திரவாதிகளிடமும், மருத்துவர்களிடமும் அழைத்துச் சென்று குணமாக்க முயற்சித்தார்கள். ஆனாலும் எந்த பலனுமில்லை. பின்பு லில்லோர் என்ற கிராமத்தில் ஷாலோம் ஊழியர் கைலேஷ் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தார். அங்கு சென்றால் மக்கள் விடுதலை பெறுகிறார்கள் என்று கேள்விப்பட்டு, என்னுடைய சகோதரர்கள் என்னை அங்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு ஊழியர் எனக்காக ஜெபித்தார். அந்த நாளில் எனக்கு விடுதலைக் கிடைத்தது.

தொடர்ந்து கூட்டத்தில் பங்கெடுத்து, இயேசுவை அறிந்து, பாவ மன்னிப்பு பெற்று, இயேசுவை எனது இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். நான் கிறிஸ்தவனாக மாறி விட்டேன் என்று அறிந்த என் மனைவி, என்னோடு சண்டை போட்டு, இயேசுவை ஏன் ஏற்றுக் கொண்டாய் என்று எதிர்க்க ஆரம்பித்தாள். எனது மாமனாரும் காவல் துறையில் பணிபுரிந்துக் கொண்டிருந்தார். அவர்கள் குடும்பமும் என்னை அதிகமாய் மிரட்டி, இயேசுவை விட்டு விடு என்று வற்புறுத்தினார்கள். ஆனாலும் நான் எனக்கு சுகம் கொடுத்த தேவனை வாழ்நாள் முழுவதும் விட மாட்டேன் என்று வைராக்கியமாய் எல்லாக் கஷ்டங்களையும் சகித்துக் கொண்டிருந்தேன். பின்பு ஒரு நாள் எனது மனைவி கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு, சுய நினைவில்லாமல் மரிக்கும் தருவாயில் சென்று விட்டாள். அந்த நேரத்தில் நான் ஆண்டவரிடத்தில் அதிகமாய் ஜெபித்தேன். அப்போது அவள் உயிர் பிழைத்தாள். இதன் மூலம் அவளும் இயேசுவை ஏற்றுக் கொண்டாள். அதன் பின் ஒருநாள் நான் இயேசுவை தரிசனத்தில் பார்த்தேன்.

இயேசுவின் பின்னால் சுமார் பத்தாயிரம் மக்கள் செல்வதைப் பார்த்தேன், இயேசு என்னைப் பார்த்து இப்படிப்பட்ட ஆத்துமாக்களை என்னிடத்தில் கொண்டு வரும்படியாக உன்னை பயன்படுத்துவேன் என்று பேசினார். உடனே ஊழியம் செய்ய வேண்டுமென்ற வாஞ்சை அதிகமாய் ஏற்பட்டது. உடனே ஷாலோம் ஊழியப்பயிற்சி பெற்று, எனது சொந்தக் கிராமத்தில் ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். பின்பு B.Th முடித்து, தற்போது சிமளியா சபையின் போதகராக ஊழியம் செய்து வருகிறேன். 2015–வது வருடத்திற்குள்ளாக என்னுடைய கர்பாடா தாலுகாவில் பத்தாயிரம் ஆத்துமாக்களை தேவனுக்காய் ஆதாயப்படுத்த வேண்டும் என்ற தரிசனத்தோடு குடும்பமாய் ஊழியம் செய்து வருகிறோம்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Jesus Redeems,** Nalumavadi

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2500/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை – 26.04.2015

தேவனுடைய பெரிதான கிருபையால் 26.04.2015 அன்று கோடியூர் சேகரம் பொன்னரவிளை சி.எஸ்.ஐ. ஆலயத்தில் வைத்து **சகோ. தினேஷ் சந்திர பார்கி** பிரதிஷ்டை செய்யப்பட்டார். இந்த பிரதிஷ்டை ஆராதனையை **Rev. Thanga Joy Devaraj** அவர்கள் **Rev. யோனத்தான், Rev. Whitelin Joel, Rev. Jebin** அவர்கள் முன்னிலையில் ஆராதனையை நடத்தினார்கள். இந்த ஆராதனையில் **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் மிஷனெரியை அறிமுகம் செய்தார்கள். **சகோ. செல்வதுரை** ஷாலோம் ஊழியத்தை அறிமுகம் செய்து வைத்தார்கள். மிஷனெரி தனது சாட்சியை பகிர்ந்துக் கொள்ள **சகோ. டேவிட்** அவர்கள் அதனை மொழிபெயர்ப்பு செய்தார்கள். இந்த ஊழியரைத் தாங்கி வருகிற சபை செயலர் **திரு. அன்பு** அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளை செலுத்துகிறோம்.

---

## ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை - 03.05.2015

தேவனுடைய பெரிதான கிருபையினாலும் அவருடைய அநாதி தீர்மானத்தினாலும் 03.05.2015 அன்று ராமநாதபுரம், வலம்புரி மஹாலில் வைத்து ஷாலோம் மிஷனெரி குடும்பக் கூடுகை சிறப்பாக நடைபெற்றது. இக்கூடுகையின் ஆரம்ப ஜெபத்தினை **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் ஏறெடுத்து நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்க கூட்டம் இனிதே ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து **சகோ. ஆலன் எல்விஸ்** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளையை நடத்தினார்கள். பின்னர் **Prof. P. ஜார்ஜ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். மேலும் பணித்தளத்தைக் குறித்ததான வீடியோ படக்காட்சி காண்பிக்கப்பட்டது.

அதன்பின்னர் நமது ஷாலோம் பணித்தளங்களிலிருந்து வந்திருந்த **(1) சகோ. ஜாலம் S. டின்டோர்,** டான்டாவட்லா, இராஜஸ்தான், **(2) சகோ. நிலேஷ் V. பாரியா,** மர்காலா, குஜராத் ஆகிய இரண்டு சுதேச ஊழியர் குடும்பத்தார் **Pr.மோசஸ் பவுலோஸ்** (இராமேஸ்வரம்) **Rev. அமிர்தநாயகம்** மற்றும் போதகர்கள் தலைமையில் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். அதன்பின்னர் ஷாலோம் **பேராயர். வே. தேவதாஸ்** அவர்கள் தேவனுடைய வார்த்தையை வல்லமையாகப் பகிர்ந்துக் கொண்டு ஆசீர்வாத ஜெபம் செய்தார்கள். தேவன் ஜனங்கள் மீது வல்லமையாக இறங்கி வந்தார். இனிய அன்பின் ஐக்கிய விருந்துடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

இந்த கூட்டத்திற்காக உழைத்த, ஜெபித்த, கொடுத்த தேவ பிள்ளைகள் யாவருக்காகவும், மேலும் மிஷனெரிகளைத் தாங்கி வரும் **சகோதரி. மூக்கம்மாள் காந்தி** அவர்கள் குடும்பத்திற்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். குறிப்பாக கூட்டத்தின் ஒழுங்குகளை பிரயாசப்பட்டு ஜெபத்துடன் செய்த **Prof. P. ஜார்ஜ்** அவர்களுக்காகவும் தேவனைத் துதிக்கிறோம்.

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை - 26.04.2015- பொன்னரவிளை CSI சபை



கர்த்தர் ஊழியர் சகோ. தினேஷ் சந்திர பாசி பிரதிஷ்டை வேளை



சபை போதகர் மற்றும் தாங்குவோர் குடும்பத்தினருடன் கர்த்தர் ஊழியர்

## பெத்தேல் பெந்தேகொஸ்தே சபை ஞாயிறு ஆராதனையில் பிஷப் தேவதாஸ் அவர்கள் - இராமேஸ்வரம் - 03.05.2015



ஞாயிறு ஆராதனையில் தேவ செய்தியளிக்கும் பிஷப் தேவதாஸ் அவர்கள்



Fr. மோசஸ் பவுலோஸ் அவர்கள் குடும்பத்துடன் பிஷப் தேவதாஸ் அவர்கள்

## ஷாலோம் மிஷனெரி குடும்பக் கூடுகை - இராமநாதபுரம்-03.05.2015



தேவ செய்தி : பேராயர். வே. தேவதாஸ் அவர்கள்,



ஊழியப் பகிர்வு : Prof ஜார்ஜ் அவர்கள்



மிஷனெரி குடும்பங்களின் பிரதிஷ்டை வேளை



மிஷனெரிகளுக்கு அன்பளிப்பு வழங்கும் திருமதி. புஷ்பம்மாள் சார்லி அவர்கள் குடும்பம்

# Bro. ரஜீவன்லால் (மும்பை) அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை


ஆலயத்தில் கலாச்சார வரவேற்பு


ஜாவத் கிராம ஆலயத்திற்கு முன்பு விசுவாசிகளுடன்


ஜாவத் கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்யும் சகோ. ரஜீவன்லால் அவர்கள்


ஜாவத் கிராம ஆலயத்தை திறந்து வைக்கும் சகோதரி. லவினா அவர்கள்


கிராம ஆலயத்திற்கு வழங்கப்பட்ட ஒலி பெருக்கி மற்றும் இசைக் கருவிகளுடன்


ஜாவத் கிராம ஆலயத்தில் கூடியிருந்த விசுவாசிகள்


ஆலய பிரதிஷ்டை நிகழ்ச்சிக்குப் பின் நடைபெற்ற அன்பின் ஐக்கிய விருந்து


பாட்டன்ரா (குஜராத்) கிராம ஆலயத்தில் பகிர்வு வேளை

## மும்பை, சகோ. ரஜீவன்லால் குடும்பத்தார், சகோ. பொன்சிங் மற்றும் சகோதரி. புஷ்ப லீலா ஆகியோரின் பணித்தள வருகை அறிக்கை

கர்த்தருடைய மட்டற்ற கிருபையினால் ஷாலோம் பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும் ஊழிய பணி ஸ்தலங்களை மே மாதம் 9, 10ம் தேதிகளில் பார்வையிட்டோம். முதல் நாளில் **சகோ. ஜெயராஜ்** அவர்களுடன் கரடு முரடான பாதைகளின் வழியாக குஜராத்திலுள்ள போர்டி, தனசியா கிராம ஆலயங்களையும், மத்தியப்பிரதேசத்தில் குந்திக்கேடா, ரூப்பக்கேடா, விசல்பூர், மேந்திக்கேடா ஆகிய கிராம ஆலயங்களை பார்வையிட்டு ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். அதன்பின் அந்தர்வேலியா கிராமத்தில் நடைபெற்ற மூத்த ஊழியர்களுக்கான திட்டக் கூடுகையில் கலந்துக் கொண்டோம். முதல் தலைமுறை கிறிஸ்தவர்களாகக் காணப்படுகிற பீல் ஆதிவாசி விசுவாசிகள் பரிசுத்த ஆவியால் நிரம்பி ஜெபிப்பது மனதை உருக்குவதாக இருந்தது. ஒவ்வொரு கிராம ஆலயத்தைப் பார்வையிட்டபொழுது அங்குள்ள சுதேச ஊழியர்களின் குழந்தைகள் இயேசுவின் நாமத்தை சொல்லி எங்களை வரவேற்று, உபசரித்தது எங்கள் மனதிற்கு சந்தோஷமாய் இருந்தது. அவர்களுடைய அனுபவ சாட்சிகளை கேட்டது எங்களுடைய விசுவாசத்தை வர்த்திக்க பண்ணுவதாக அமைந்தது.

இரண்டாவது நாளான 10.05.2015 அன்று பாட்டன்பூரா கிராம ஆலயத்திற்குச் சென்று ஆராதனையில் கலந்துக் கொள்ளவும், அந்த கிராம சபை போதகர் **Pr. மங்குபுரியா** அவர்கள் எவ்வாறு இரட்சிக்கப்பட்டார்? மரித்துப் போன தன்னை ஆண்டவர் எப்படி உயிரோடு எழுப்பினார் என்பதையும் பகிர்ந்துக் கொண்டார். ஆண்டவர் பீல் மக்களை எவ்வளவு அதிகமாய் நேசிக்கிறார் என்பதை அறிந்துக் கொண்டோம். அதைத் தொடர்ந்து எங்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவி ரூ. 2 இலட்சம் செலவில் குஜராத் ஜாலத் கிராமத்தில் கட்டப்பட்ட ஆலயத்தை **பேராயர். வே. தேவதாஸ்** அவர்கள் ஜெபிக்க நாங்கள் குடும்பமாக பிரதிஷ்டை செய்து திறந்து உள்ளே சென்றோம். புதிய ஆலயத்தின் உள்ளே சபை மக்கள் மிக சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் தேவனை மகிமைப் படுத்தினார்கள். அந்த மக்கள் எங்களை மிகுந்த அன்புடன் கலாச்சார முறைப்படி வரவேற்றார்கள். அந்த ஆலயத்திற்குத் தேவையான இசைக்கருவிகள் மற்றும் ஒலிப் பெருக்கி சாதனங்கள் வழங்கினோம். நினிவே பட்டணத்தின் 1 இலட்சத்து 20 ஆயிரம் மக்களுக்காக பரிதபித்த தேவன் அந்த மக்களுக்கு யோனாவின் மூலம் இரட்சிப்பை கொண்டு வந்தார். ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி ஜனங்களை **சகோ. தேவதாஸ் குடும்பத்தின்** மூலமாக இரட்சிப்புக்குள் வழிநடத்தி வருகிறார்.

23 வருடங்களாக நடைபெறுகிற இந்த ஊழியங்களில் கடந்த 17 வருடங்களாக எங்களை இணைத்து இந்த ஊழியங்களுக்காக ஜெபிக்கவும் தாங்கவும் ஆண்டவர் கிருபை பாராட்டி வருகிறார். அதன் நித்தமாக மும்பை பட்டணத்தில் ஒரு பெரிய கம்பெனியின் அதிகாரியாக அடியேனை உயர்த்தியிருக்கிறார். இதை வாசிக்கிற நீங்கள் இந்த ஊழியங்களுக்காக முழு மனதோடு ஜெபித்து, தாங்க வேண்டும். கல்விப் பணிக்கு உதவி செய்யலாம், ஆலயங்களைக் கட்டிக் கொடுக்கலாம். நாங்கள் குடும்பமாக பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியத்தை பார்வையிட்ட இந்த நாட்கள் எங்கள் வாழ்வில் மறக்க முடியாத நாட்களாகும்.

## குஜராத் பணித்தள அலுவலகத்தில் தேவனுடைய ஊழியம் செய்ய ஊழியர்கள் தேவை

*தேவ கிருபையினால் கடந்த 23 ஆண்டுகளில் நம் ஷாலோம் ஊழியங்கள் விரைவாக வளர்ந்து வருகிறது. ஆகவே குஜராத் பணித்தள அலுவலகத்தில் பணிபுரிய நமக்கு ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்.*

1. **Accounts Department –ல் பணிபுரிய**
2. **Media Department (Audio, Video - Shooting & Editing) –ல் பணிபுரிய**
3. **Communication Department –ல் பணிபுரிய. (Tamil & English Typing தெரிந்த)**
4. **Magazine Department –ல் பணிபுரிய. (Tamil & English Typing தெரிந்த)**

இந்தப் பணிகளைச் செய்ய ஊழியர்கள் (சகோதரர்கள், சகோதரிகள் & திருமணமான தம்பதிகளானாலும் குடும்பமாக) நமக்கு உடனடியாக தேவைப்படுகிறார்கள். ஆகவே ஊழியத்திற்கு அர்ப்பணித்து, ஊழிய வாஞ்சை உள்ளவர்கள் இருப்பீர்களானால் எங்களோடு தொடர்பு கொண்டு உங்களது Bio-Data வை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். மேலும் தூத்துக்குடி அலுவலக மேலாளர் **சகோ. சாம் குணசீலன்** அவர்களோடு தொடர்பு கொள்ளலாம். **செல் போன் : 9345675468**

**"அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்." மத்தேயு 9:37**

## *ஷாலோம் உபவாச ஜெபங்கள்*

| நாள் & நேரம் | இடம் |
|---|---|
| **13.06.2015,** *சனிக்கிழமை*<br>நேரம் : *மாலை 5.00 மணிக்கு* | M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, **மார்த்தாண்டம்**<br>தொடர்புக்கு:<br>**சகோ. G. செல்வதுரை, Cell : 94876-89869,**<br>**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405**<br>**சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820** |
| **20.06.2015,** *சனிக்கிழமை*<br>நேரம் : *காலை 10.00 மணி முதல் 1 மணி வரை* | எபனேசர் பிளாசா, பரமா தெரு, WCC ஜங்சன்,<br>**நாகர்கோவில்.**<br>தொடர்புக்கு: **Cell : 9698844511** |
| **27.06.2015,** *சனிக்கிழமை*<br>நேரம் : *காலை 10.00 மணி முதல் 1 மணி வரை* | No. 102 - 2வது மெயின் ரோடு, சத்யா நகர், பாடி, **சென்னை**<br>தொடர்புக்கு:<br>**சகோ. ஜாண் ஜெயசிங், Cell : 9698244577** |

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

# ஞாபகப்படுத்துகிறோம்



## *அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு,*

***அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!***

இந்தக் கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசிப் பிள்ளைகளும் நன்றாகப் படித்து முன்னேறி வருகிறார்கள். மேலும் ஒவ்வொரு வருடமும் நீங்கள் இந்த பீல் ஆதிவாசி மாணவர்களின் கல்வித் தேவையைச் சந்தித்து வருகின்றதற்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் நீங்கள் பீல் ஆதிவாசிச் சிறுவர்களின் கல்விக்காக சேகரித்துள்ள காணிக்கையை இந்தக் கல்வியாண்டின் துவக்கமான **ஜுன் மாதத்திற்குள்** உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளைச் சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக தினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம்.

நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காகக் கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O., D.D., or Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். அதைத் திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் ***9345675468*** – இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

---

**தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் நடைபெறும்**

## வாக்குத்தத்த உபவாச ஜெபக் கூடுகை

நாள் : **05.06.2015 (வெள்ளிக்கிழமை)** நேரம் : **காலை 9.15 முதல் 1.00**

தேவச் செய்தி : ***Prof. C.S.* கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

New No. 5A/323, Old.No. 5/168, கால்டுவெல் காலனி 3 வது தெரு, தூத்துக்குடி – 628 008.

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



**பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக**

கர்த்தர் தரிசனமாகக் கொடுத்த குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள 1 கோடி பீல் ஆதிவாசி மக்களும் இயேசுவை அறிந்துக் கொண்டு அவரை ஏற்றுக் கொண்டு அங்குள்ள மந்திரவாதிகள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், பலவிதமான பாவ, சாபங்களிலும் உள்ள மக்கள் இரட்சிக்கப்பட்டு இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்று சாட்சியாக வாழவும் ஜெபியுங்கள்.

**புதிய கல்வியாண்டு :**

1. நம்முடைய பீல் ஆதிவாசி மக்களுடைய பிள்ளைகள் 10th, +2 தேர்வுகள் எழுதியிருக்கிறார்கள் அவர்கள் நல்ல மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சி பெற வேண்டும் என்று அவர்களுக்காக கர்த்தரிடம் ஊக்கமாய் ஜெபியுங்கள்.
2. பிள்ளைகள் உயர்கல்வி என்ன கற்கவேண்டும் என்று கர்த்தர் சித்தம் வைத்திருக்கிறாரோ அந்தத் திட்டங்கள் நிறைவேறி அவர்கள் சிறப்பாக படித்து முன்னேறும்படியாக ஜெபியுங்கள்.
3. இந்த பீல் மக்கள் பிள்ளைகளுக்கு உயர்கல்வி மற்றும் புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைக்கும் பிள்ளைகளுக்குத் தேவையான அனைத்து பொருளாதாரத் தேவைகளும் சந்திக்கப்படும்படியாகவும், அவர்கள் விரும்புகிற உயர்கல்வி அவர்களுக்கு கிடைக்கும்படியாகவும், படிக்கின்ற அனைத்து பிள்ளைகளுடைய தேவைகளும் சந்திக்கப்படும்படி ஜெபியுங்கள்.

**நிலநடுக்கம்**

நேபாளில் நடந்த பூமியதிர்ச்சியினால் அநேக இடங்களிலும் பூமியதிர்ச்சி நடைபெற்று அநேகர் தங்கள் குடும்பங்களை இழந்து தவிக்கின்றனர் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவன் தாமே ஆறுதலையும், அடைக்கலத்தையும் கொடுக்கும்படியாகவும், இந்த மக்கள் அனைவரும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்படியாகவும் இவர்களுக்காக ஜெபியுங்கள்.

**பேராயர் தேவதாஸ் அவர்கள் குடும்ப நலனுக்காக**

பிஷப் தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ், பிள்ளைகள் டைட்டஸ் – மெர்லின், ஷாலோம், ஷெக்கினா, Zion Kryston , இவர்களுக்காக ஜெபியுங்கள். இவர்கள் அனைவருக்கும் தேவன் தாமே நல்ல சுகம், பெலன், ஆரோக்கியத்தையும், நல்ல பாதுகாப்பையும் கொடுக்கும்படியாகவும், ஊழியத்திற்கு இவர்கள் செல்கின்ற இடங்களில் எல்லாம் தேவன் இவர்களை வல்லமையாக பயன்படுத்தும்படியாகவும் இவர்களுக்காக பாரத்தோடு ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஊழியத்தின் வெள்ளி விழா ஆண்டு**

ஜுலை 1–ம் தேதி நம் ஷாலோம் ஊழியம் 25 ம் ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்கப்போகிறோம். தேவன் தாமே இம்மட்டும் நம் ஊழியத்தை ஆசீர்வதித்து பெருகச்

செய்திருக்கிறார். இந்த 25ம் ஆண்டை தேவன் இன்னும் அதிகமாக எல்லாக் காரியத்திலும் பெருகச் செய்ய வேண்டும், நம் ஊழியத்தில் தேவன் பெரிய காரியங்களையும், அற்புத அடையாளங்களையும் செய்யும்படியாகவும், ஷாலோம் ஊழியத்தின் தலைவராக தேவன் தாமே இருந்து வழிநடத்தும்படியாகவும் ஜெபியுங்கள்.

**பணித்தள பீல் மக்கள்**

10 இலட்சம் ஆத்துமாக்கள், 1000 சுதேச ஊழியர்கள், 1000 சபைகள் இந்த வருடத்திற்குள்ளாக எழும்பவும், இதை கர்த்தர் ஆசீர்வதித்து நடத்தித் தரவும் நாம் கருத்தாய் ஜெபிப்போம்.

**ஆதரவாளர்கள் குடும்பங்களுக்காக**

நம் ஷாலோம் ஊழியத்தைத் தாங்கி வரும் நம்முடைய ஆதரவாளர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றையும் தேவன் தாமே ஆசீர்வதிக்கும்படியாகவும், தங்களுடைய வறுமையினால் நம் ஊழியத்துக்கு கொடுத்து வந்து தற்போது கொடுக்க முடியாமல் இருக்கும் ஆதரவாளர்களுடைய குடும்பங்களுக்காக விசேஷமாக ஜெபித்து அவர்கள் வறுமை நிலை மாறி அவர்கள் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படவும், அதன் மூலம் நம் ஊழியத்தை அவர்கள் சந்தோஷமாக நன்றியோடு தாங்கவும் நாம் கருத்தாய் ஜெபிப்போம்.

**தலைமை அலுவலகம், பணித்தள அலுவலகம், கிளை அலுவலகங்களுக்காக**

நம் ஊழியத்தில் பணியாற்றும் தலைமை அலுவலக ஊழியர்கள் மற்றும் பணித்தள ஊழியர்கள், கிளை அலுவலகங்களில் உள்ள ஊழியர்கள் அனைவரும் இவ்வூழியத்தை உண்மையோடும், உத்தமத்தோடும் செய்யும்படியாகவும், இவர்கள் குடும்பங்களை தேவன் ஆசீர்வதிக்கும்படியாகவும், இவர்கள் பிள்ளைகளையும் கர்த்தர் ஆசீர்வதித்து பெருகச் செய்யும்படியாகவும் நாம் கருத்தோடு ஜெபிப்போம்.

**ஊழியங்களுக்காக ஜெபிப்போரும், தாங்குவோரும் எழுப்பப்பட**

நம் ஷாலோம் ஊழியத்திற்காக ஒவ்வொரு நாளும் கருத்தோடு ஜெபிக்க ஜெபப் பங்காளர்கள் தேவை. தேவன் தந்த தரிசனத் திட்டமான ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பின் பணியில் நடைபெறும் இந்த மாபெரும் ஊழியத்தினை ஜெபத்தில் தாங்கக் கூடிய ஜெபப் பங்காளர்களை ஒவ்வொரு மாநிலத்திலும், மாவட்டங்களிலும் எழுப்பவும், இந்த மாபெரும் திட்டப்பணியின் தேவைகள் சந்திக்கப்பட அநேக ஆதரவாளர்கள் மற்றும் ஊழிய பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷனின் வளர்ச்சிக்காக**

ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் தாங்கப்படும் ஹாஸ்டல் பிள்ளைகள், பிஜல்பூர் பள்ளி மாணவர்கள், வீட்டிலிருந்து கல்வி பயின்று வரும் பிள்ளைகள், பராமரிக்கப்படும் பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாவலையும், சுகத்தையும் கொடுத்து இந்த பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் கிடைக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

# ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

| | |
|---|---|
| **CHENNAI BRANCH OFFICE**<br>**Bro. John Jeyasingh**<br>No.102-2nd Main Road<br>Sathya Nagar, Padi,<br>CHENNAI - 600050.<br>Cell : 9698244577 | **MARTHANDAM BRANCH OFFICE**<br>**Bro. Selvadurai.G**<br>Bethel,<br>25-7/A 1-Block 25, Paruthivilai,<br>Kannakode, Marthandam - 629165<br>Cell : 9487689869 |
| **MUMBAI BRANCH OFFICE**<br>**Bro. Prabhakaran. P.**<br>C/o. Mr. P.Immanuel,<br>C-2, Plot No.123-Old Mhada Colony,<br>Mangalya Co.Op.Society Ltd,<br>Pokharan Road No.2,<br>Thane West - 400610<br>Cell : 9768282699 | **NAGERCOIL BRANCH OFFICE**<br>SHARING LOVE MISSION Branch<br>Ebenezer Plaza, Parama Street,<br>WCC Junction,<br>Nagercoil - 629001<br>Cell : 9698444522 |
| **MADURAI BRANCH OFFICE**<br>**Bro. Chandra Paul. S**<br>6/3, Nellaiappar Puram 7th Street,<br>Tirunagar (p.o)<br>MADURAI-625006<br>Cell : 9698644522 | **TIRUNELVELI BRANCH OFFICE**<br>**Bro. David. R**<br>56 A/4,-C.S.I Church South Street,<br>(Upstairs) STC road,<br>Perumalpuram, Palayamkottai<br>TIRUNELVELI-627007<br>Cell 9698844599 |

## குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**TMB**
**Tamilnad Mercantile Bank**

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

**AXIS BANK**

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

---

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

**AXIS BANK**
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

**ICICI Bank**
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : 9698244522

## நாட்டு நடப்புச் செய்திகள்

கடந்த ஏப்ரல் மாதம் நேபாளத்தில் ஏற்பட்ட பெரிய நில நடுக்கத்தினால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பலியாயினர். மேலும் அநேகர் வீடுகளையும், உடமைகளையும் உறவினர்களையும் இழந்து தவித்தனர். இந்த நில நடுக்கத்தினால் ஏராளமான கட்டிடங்கள் மற்றும் பழங்கால நினைவுச் சின்னங்கள் அனைத்தும் இடிந்து தரை மட்டமானது. இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவு கோளில் 7.9 ஆக பதிவாகியது. இது இந்தியாவிலும் சில மாநிலங்களில் பாதிப்பை ஏற்படுத்தியதோடு, சென்னையிலும் உணரப்பட்டது. இந்நிலையில் மே 12ம் தேதி நேபாளத்தை மீண்டும் ஒரு சக்திவாய்ந்த பூகம்பம் தாக்கியுள்ளது. இது ரிக்டர் அளவுகோளில் 7.4ஆக பதிவாகியுள்ளது.

---

ரஷ்யா எம் – 27எம் என்ற ஆளில்லாத விண்கலத்தை ஏவியது. இதில் விண்வெளி ஆய்வுக் கூடத்திலுள்ள ஆறு வீரர்களுக்குத் தேவையான ஆக்ஸிஜன், தண்ணீர், விண்கல உதிரிப்பாகங்கள் உள்ளிட்ட பொருட்கள் இருந்தன. இந்நிலையில் செலுத்தப்பட்ட சிறிது நேரத்தில் விண்கலத்துடன் உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டது. அதன்பின் விண்கலம் தீ பிடித்து எரிந்து பசிபிக் கடலில் விழுந்தது.

---

இங்கிலாந்து பொதுத் தேர்தலில், கன்சர்வேட்டிவ் கட்சி பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றியதை அடுத்து, அக்கட்சித் தலைவர் டேவிட் கேமரூன் இரண்டாவது முறையாக, மீண்டும் பிரதமராகிறார்.

---

உலகில் மரபுக் கோளாரினால் ஏற்படுகிற பார்வை இழப்பை மீட்க சரியான வழி கண்டுபிடிக்கப்படாத நிலையில், தற்போது வந்திருக்கிறது பயோனிக் கண்கள். பயோனிக் என்றால் எலெக்ட்ரானிக் மற்றும் மென் பொருட்களால் தயாரிக்கப்பட்ட செயற்கை உடல் உறுப்புகள் என்று அர்த்தம். இயற்கை உடல் உறுப்புகள் செய்யும் அதே வேலையை இந்த பயோனிக் உறுப்புகள் உடலின் வெளியிலிருந்து செய்யும். அமெரிக்காவில் ரோசெஸ்டரில் உள்ள மேயா கிளினிக் மருத்துவர்கள் இந்தக் கண்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Ph. : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# நிலைத்திரு CBC (VBS) வகுப்புகள் - 2015



ஆலயத்திற்கு முன்பு CBC புத்தகங்களுடன் சிறுவர்கள்





ஆலயங்களில் CBC அபிநயப் பாடல் வேளை



மனப்பாட வசனம் கூறும் சிறுவன்



குழு கலந்துரையாடல் நிகழ்வு



வேத வசனங்களைக் கற்றுக் கொடுக்கும் CBC ஆசிரியை



குழுவாக கற்றுக் கொள்ளும் CBC மாணவர்கள்



ஜெபிக்கின்ற CBC மாணவர்கள்



CBC மாணவர்களுக்கான அன்பின் ஐக்கிய விருந்து

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



மாணவியின் பெயர் : **உஷா R. ஹட்டிலா**

தந்தையின் பெயர் : ராமு ஹட்டிலா

தாயாரின் பெயர் : ஜோஸி ஹட்டிலா

பிறந்த நாள் : 05.04.1998

படிக்கும் வகுப்பு : 11th Std.

சொந்த ஊர் : ரிசுர்புரா

மாவட்டம் & மாநிலம் : தாகோத், குஜராத்

**மாணவியின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–** இவளுடைய தந்தை இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தை சேர்ந்தவர். இவர் அநேக்த ஆவிகளை வணங்கி வந்தார். 14 வருடங்களுக்கு முன்பாக இவர் பிசாசின் பிடியினால் கட்டப்பட்டு இருந்தார். விடுதலைக் கிடைக்கவேயில்லை. அந்தசமயத்தில் உறவினர் ஒருவர் ஷாலோம் ஊழியரை அழைத்து வந்து ஜெபித்தார். அப்பொழுதே தேவன் பெரிய விடுதலைக் கொடுத்தார். அதன் மூலமாக இயேசுவை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். பின்பு தேவனுக்காக ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையை தேவன் அவர் உள்ளத்தில் கொடுத்தார். அதன்படி ஊழிய பயிற்சி பெற்று தற்போது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவியைக் குறித்து :–** உஷா நன்றாக படிப்பாள். பாடுவது மிகவும் பிடிக்கும். இவளுக்கு 1 சகோதரர் மற்றும் 2 சகோதரிகள் உண்டு.

**ஜெபியுங்கள் :–** இவளுக்காக, இவளுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிறஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

மாணவியைத் தாங்குபவர் :– **Ms. Suganya, Kovilpatti.**

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 700/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 1195 மாணவர்களில் இன்னும் **206 மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குபவர்களாக நாமாய் அறிமுகப்படுத்துங்கள்.